299

ஸ்ரீ:

கதைக்கொத்து

299
3.15

மலர் 4

OFFICE OF THE REGISTRAR ...
28 ...

V. RAJAGOPALA AIYANGAR,

Author of the Tamil Works of 'Greek Legends,' 'Ivanhoe,' and The 'Talisman,' etc., etc.

MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

1915

ht] [Price As. 5

O31,1x
N15
222807

299
3·15

ஶ்ரீ:

கதைக்கொத்து

மலர் 4

OFFICE OF THE REGISTRAR OF ...
26 JUL 1915
MADRAS.

BY

V. RAJAGOPALA AIYANGAR,

Author of the Tamil Works of 'Greek Legends,'
'Ivanhoe,' The 'Talisman,' etc., etc

MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

Registered Copyright] 1915 [*Price As. 5*

PRINTED AT

THE 'CAXTON PRESS,

MADRAS, E.

PREFACE.

At this time of day when the vernaculars have received a fresh impetus, any elaborate apology for bringing out this volume is superfluous. There cannot at present be too many of good Tamil books. On the contrary there is a clamorous cry for good readable books in Tamil. The great Tamil classics address themselves to the learned few, and the general reader has no good books to take to.

This booklet proposes in its own humble way to meet this want. Written in simple easy flowing style the book scrupulously avoids all slang on the one hand, and learned pedantry on the other. It is chiefly intended to be used in schools in the Second Form as Supplementary Reader and the stories have been accordingly carefully graduated, the language employed is always homely, never lapsing into coarseness and vulgarity.

The stories selected are of such a nature as cannot fail to arouse interest and engage the attention of the youths. Another interesting feature of the book is that a neat smart quotation from Nalvali, Vakkundam, Nanneri, Nithinerivilakkam etc., leads off every story, and holds in little the essence and moral of the whole.

This is intended to be the Fourth of the Short Stories Series in Tamil. Any emendations and suggestions proposed will be most thankfully accepted.

KAMBAR VILAS,
30th June 1915. } V. R.

CONTENTS

அட்டவணை

		பக்கம்.
1.	திருவில்திற லுடையதில்லை ஒருவர்க்கு ...	1
2.	எண்ணி ஒருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது புண்ணியம் வந்தெய்து போதல்லால் ...	4
3.	வருந்தி அழைத்தாலும் வாராத வாரா ஆவாரை ஆரே அழிப்பார் ...	6
4.	பொருந்துவன போமினென்றால் போகா சாவாரை யாரே தவிர்ப்பவர்? ...	8
5.	தேட்டம் மரியாதை காணும் ...	9
6.	சால ஒழுக்கம் உயர்குலத்தில் நன்று ...	11
7.	வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் ...	15
8.	நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே சீர் ஒழுகு சான்றோர் சினம் ...	19
9.	தார்வேந்தர் கெட்டால் மனஞ்சிறிய ராவரோ வயிறு வளர்க்கைக்கு மான மழியாமை உயிர்விடுகை சால உறும் ...	22
10.	மாசற்ற நெஞ்சுடையார் வன்சொ லினிது ...	23
11.	பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு பிறர்க்குதவி ஆக்குவோர் பேறும் ...	26
12.	கடலே அனையம்யாம் கல்வியா லென்னும் அடலே றனையசெருக் காழ்த்தி — விடலே ...	30

13. உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க ... 33

14. மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர் தமைத்தாம் மருவில் ... 34

15. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் ... 36

16. தம்மையும் தங்க டலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர் — தம்மின்
இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர் ... 38

17. எழுத்தறியார் கல்விப் பெருக்கமனைத்தும்
எழுத்தறிவார் காணின் இலையாம் ... 41

18. ஆக்கு மறிவான் அலது பிறப்பினல்
மீக்கொ ளுயரிழிவு வேண்டற்க ... 43

19. கல்லா அறிவிற் கயவர்பால் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நண்ணுரே ... 46

20. முனிவினும் நல்குவர் மூதறிஞர் ... 47

21. உள்ளக் கனிவினும் நல்கார் கயவர் ... 49

22. எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குரியர் ... 50

23. கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள் ... 53

24. பெரியார்முன் தன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழும் ... 55

25. கற்றறியார் செய்யும் கடுநட்பும் தாம்கூடி
உற்றுழியும் தீமைநிகழ் வுள்ளதே ... 57

26. கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை ... 59

27. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க ... 61

28. ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப ... 62

29. கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉங்
குற்றம் தமதே பிறிதன்று ... 63

30. மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார் ... 65
31. சிறிய பகை யெனினும் ஓம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையார் ... 66
32. புறம் நட்டகம் வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும் ... 68
33. இன்னாா் கனியும் மொழியும் கடுவே ... 69
34. நல்லா ரொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார் ... 70
35. எத்துணைய வாயினும் கல்வி இடமறிந்து
உய்த்துணர் வில்லெனில் இல்லாகும் ... 72
36. சொல்வளம் மல்லல் வெறுக்கை ... 74
37. எல்லா விடத்தும் கொடைதீது ... 76
38. திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தரும் சிவந்த தாமரையாள் தான் ... 77

"முயற்சி திருவினை ஆக்கும்"

OFFICE OF THE REGISTRAR
26 JUL 1915
MADRAS.

ஸ்ரீ:

கதைக்கொத்து

1. "திருவில்திற லுடையதில்லை ஒருவர்க்கு"

மணிபல்லவ நகரத்தில் வசிப்போனாகிய தனபதி துப்தனென்னும் ஒரு வணிகன் தன் பணத்தின் மகிமையால் மகா ராஜாக்களாலும் ஸாதிக்கக்கூடாத பல அரியகாரியங்களை முடித்துவர, அதைக் கண்ட அவ்வூர் அரசன் அவன்மீது பொறாமையுற்று, அவனை அவமானம் செய்துவிட வேண்டும் என்று எண்ணினான்; அதற்காக அவன் தனது மந்திரியை அழைத்து, "நாளை நாம் இந் நகரத்தை வலம் வந்து நமது குடிகளுள் தக்க யோக்யதையுடையவர்களை மரியாதை செய்ய எண்ணியிருக்கிறோம்; 'தனவான்கள் யாவரும் ஸித்தமாக இருக்கக் கடவர்' என்று பட்டணத்திற் பறை அறைவி" என்று உத்தரவு செய்தான்.

அமைச்சன் வேந்தன் ஆஜ்ஞையைச் சிரமேற் கொண்டு, முரசறைவிக்க, மன்னவன் பிறகு தனது சேனைத் தலைவனை அழைப்பித்து, "வீர! நாம் நாளை ஊர்வலம் வரும்பொழுது, நமது குடிகளுள் லக்ஷத்துக்கு மேல் ஸ்திதி யுடையவர்களது வாசல் தோறும் நமது சிவிகை நிற்கவேண்டும். ஆனால்

தனபதி வீட்டு வாசலிலோ சிறிதும் நிற்க வேண்டாம். அவ் வ்ணிகப் பயல் என்ன முயற்சி செய்தாலும், நீ இடங் கொடுக்க வேண்டியதில்லை'' என்று கண்டிப்பாய் உத்தரவு செய்தான். சேனாபதி, “சித்தம் ப்ரபோ!'' என்று தலை வணங்கி விடை பெற்றுக் கொண்டு, அதன் நிமித்தம் செய்ய வேண்டிய முன் ஜாக்ரதைகளைச் செய்யப் போய் விட்டான்.

ராஜ ஸமுகத்தில் நடப்பன யாவற்றையும் ஒற்றர் மூலமாக நிமிஷத்திற் கொருமுறை அறிந்து வரும் தனபதி குப்தன் இவ்விஷயங்களைக் கேட்டு, “நல்ல திருக்கட்டும்'' என்று, ஒருபாயம் பண்ணிக்கொண் டிருந்தான். மறுநாள் நகர வலத்திற்குப் புறப்பட்ட மன்னவனது சிவிகை ஒவ்வொரு லக்ஷாதிகாரி வீட்டு வாசலிலும் நிற்க, அவரவர் தக்க உபஹாரங்களைக் கொண்டு வந்து ஸமர்ப்பித்து, வேந்தனை வணங்கினர். வேந்தனும் அவ்வவரது அந்தஸ்துக்கு ஏற்றவாறு மரியாதை செய்து அனுப்பினன்.

இப்படியாக ராஜசிவிகை தனபதி மாளிகையின் வாசலையும் அணுகிற்று. அப்போது சிவிகைக்காரர்கள் ஸங்கேதப்படி துரிதமாக நடக்க, இதை முன்னதாகவே எதிர் பார்த்திருந்த அவ் வணிகன் அரசனைப் பலாத்காரமாகத் தன் வாசலில் நிறுத்தக் கருதி, மாணிக்கக் கற்களும் வயிரங்களும் முத்துக்களும் மோஹராக்களுமாகப் பை பையாய் அவிழ்த்து, வீதியில் கூடியுள்ள ஜனங்களினிடையே, “மன்னன் வாழ்க! இறைவன் ஓங்குக!!'' என்று ஆரவாரம் செய்துகொண்டு இறைத்தான்.

பணத்தைக் கண்ட ஜனங்களுக்கு அதை விட்டு விடப் பைத்தியமா! கடலே போல ஆரவாரம் செய்துகொண்டும், ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கொண்டும், தள்ளிக்கொண்டும் அத் திரவியத்தைப் பொறுக்கத் தொடங்கினர். தனபதியும் கை ஓயாமல் பல பல பைகளை அவிழ்த்து உதறி, ஜனங்களைப் பின்னும் அதிகமாக உற்சாகப்படுத்திவிட, கூட்டம் முன்னிலும் பலமடங்காகி, ஆரவாரமும் அதிகரித்து, வீதியில் எள்ளிடவும் இடமில்லாமல் ஒரே புழுதி மயமாய் விட்டது.

கண்ட ஸேனாதிபதி அரசனது ஆஜ்ஞைக்கு [illegible]ஞ்சி, ராஜ சிவிகைக்கு வழி விடும்படி கூட்டத்தைத் தன்னாலான மட்டும் விலக்கிப் பார்த்தான். என்ன விலக்கியும் கூட்டங் கலையாமையைக் கண்டு, சேனாபதி கோபங்கொண்டு, சில ஜனங்களை வெட்டி வீழ்த்தினான். அதனால் மகத்தான கலகம் நேர்ந்து விட்டதேயன்றி, கூட்டம் கலையவே இல்லை. ராஜ சிவிகையும் நகர இல்லை. இக் கூட்டம் கலைய ஒரு யாம நேரம் பிடித்ததால், அதுவரையும் மன்னவன் சிவிகை அவ்வணிகனது வாசலிலேயே நிற்கும்படியாயிற்று.

தனபதி தன் மனத்திலிருப்பதைச் சிறிதும் வெளிக் காட்டாமல், அரசன் சமுகம் வந்து வணங்கி நின்றான். கண்ட மன்னவனும் தன் உள்ளத்துள் கிளர்ந்து பொங்கும் கோபத்தையும் பொறாமையையும் ஒருவாறு அடக்கிக்கொண்டு, தனபதியின் அந்தஸ்துக்கேற்ப மரியாதை செய்தான்.

ராஜனது பெரு முயற்சியையும் கெடுத்து, தனக்கு நேர்வதாயிருந்த பேரவமானத்தினின்றும்

தன்னைக் காத்துக்கொண்ட தனபதியின் செல்வப் பெருக்கையும் சக்தியையும் கண்டு, அவனது பகைவர் அஞ்சி ஒடுங்கினர். அரசனும் பிறகு அவனுடன் அந்தரங்கமாய் நட்புக் கொண்டான்.

---

2. "எண்ணி ஒரு கருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது புண்ணியம் வந்தெய்து போதல்லால்"

சித்திரங்கள் எழுதுவதில் பிரசித்தி பெற்ற ரவிவர்ம ராஜாவினது குருவான ஸோமவர்ம ராஜா ஒருநாள் வேட்டைக்குப் போயிருந்தபோது, காட்டில் ஓர் அழகிய மானைத் துரத்திக்கொண்டு ஒருநாள் முழுதும் ஓடி அலைந்தார். அப்படி அவர் அலைந்தும், அது பிடிபடாமையால், மறுநாள் வெகு சிரமப்பட்டு அதைப் பிடித்தார். அவ்வேட்டையில் அவருக்குத் துணைநின்று அம்மானை வளைத்து மடக்கியது 'வைரவ சிங்கம்' என்ற அவரது அருமை நாயாதலால், அதன் மேல் அவருக்குப் பரமவிச்வாஸமுண்டாய்விட்டது. வாயில் நுரை திமிர வாலைக் குழைத்துக்கொண்டு 'நாம் ஜயித்துவிட்டோம்' என்னும் இறுமாப்புடன் தம் எதிரில் நின்ற அந்த நாயைப்பார்த்த வளவில், அவருக்கு அதைப்போல படம் வரையவேண்டுமென்னும் அவா உண்டாயிற்று.

அவ்வவாவோடு அவர் வீட்டிற்கு வந்து, அதே காரியமாக ஓவியம் தீட்டத் தொடங்க, ஒருநாளில் பல சித்திரங்களை எழுதி முடிக்கவல்ல அவர் ஒருமாதம் வரையிலும் தாம கண்ட காட்சிப் படி சித்திரம் எழுதக் கூடாமல் மனம் சலித்துப்

போயினர். அவர் எழுதிய சித்திரத்தில் ஒவ்வா திருந்த அம்சம் யாதெனில், அந்நாயினது நுரை தள்ளியிருந்த வாய் ஒன்றுதான். இந்தக் குறையை நினைத்து அவர் மனம் வருந்தி ஏங்கி யிருக்கையில், ஒரு சோதிடர் வந்து, "நீர் என்னதான் பிரயாசைப்பட்டாலும், இன்னும் பதினைந்து நாள்களுக்குள் உமக்கு இந்தக் காரியம் பலியாது" என்றார்.

சோமவர்மர் கேட்டு, "ஆ! இந்த அற்ப வேலைக்கு ஆங்காலமும் வேண்டுமோ? நான் நாளையே முடித்து விடுகிறேன்" என்று சொல்லி, தம்மால் கூடியவரையில் கஜகரணம்போட்டுப் பார்த்தார். சோதிடர் சொல்லிய பதினைந்து நாள்களும் கடந்து போயின. இன்னும் அவருக்குச் சித்திரம் முடிய வில்லை. அதைக் கண்ட அவர் வெகு கோபங் கொண்டு, தாம் துடைப்பதற்கு வைத்திருந்த கடற் பஞ்சை எடுத்து அக்குறைச் சித்திரத்தின் மீது வீசி எறிந்தார்.

எறிந்தது தான் தாமதம்! அவரது நல்ல காலத்தின் பயனாக, அப் பஞ்சு அந்நாய் உருவின் வாய்ப்புறத்தில் விழுந்து, உண்மையான நுரை போல அவ்விடத்தில் வரைந்துவிட்டது! பார்த்தார் ஸோமவர்மர்! பேரானந்தங்கொண்டு, "ஹா! ஹா! எல்லாம் கடவுள் செயல்! மனிதன் தானாகச்செய்து விடுவது ஒன்றுமில்லை! மூட ஜனங்கள் கடவுள் செய்துவைக்கும் காரியங்களைத் தாம் செய்ததாக நினைத்து மயங்குகின்றன!" என்று சொல்லிக் கொண்டு, பகவானைத் தியானித்திருந்தார்.

3. "வருந்தி அழைத்தாலும் வாராத வாரா" "ஆவாரை ஆரே அழிப்பார்"

கம்பரை இளமை முதல் வளர்த்துக் கல்வி பயிற்று வித்தவரும், இரவலருக்கு வரையாது கொடுக்கும் வள்ளன்மை யுடையவரும், அரசரும் நாணும் படியான பெருஞ்செல்வம் படைத்தவரு மான சடைய முதலியாரிடம் ஒரு நாள் கம்பரது தூதன் ஒருவன் வந்து, ஒரு சீட்டைக் கொடுத் தான். அதில், கம்பர் கைப்பட, "வள்ளலாரே! உமதிடத்துள்ள மாணிக்கங்களில் ஒன்றை இத் தூதன் மூலமாக அனுப்புக" என்றுஎழுதியிருந்தது. கண்ட சடைய முதலியார், "ஆ! ஆ! கைவசம் ஒரு மாணிக்கமாவது இல்லையே! இன்று தானே கடைசியாக இருந்த ஒன்றையும் தானம் செய் தோம்; நமது கம்பருக்கு இப்போது என்ன சொல் லியனுப்புவோம். மாணிக்க மில்லாது தூதனை நாம் அனுப்புவதினும், தூதன் தானே மீண்டு போய், சடையன் இறந்து விட்டானென்று கம்ப ருக்கு உரைத்து விடட்டும்" என்று நினைத்துக் கொண்டு, "சாவதே காரியம்" என்று துணிந்து, கொல்லைப் புறத்துக் கிணற்றில் விழுந்து விட ஓடினர்.

போன துரிதத்தில் கிணற்றின் கீழே கிடந்த மகாஸர்பம் ஒன்றை மிதித்துவிட, அது துள்ளித் தப்பித்துக்கொண்டு, அருகிலிருந்த புற்றில் நுழை யப் போயிற்று. கண்ட சடையர், "இது இப்போது மிக்க கோபமுற் றிருக்கிறது. நம்மைக் கடித் தால், நாம் மாண்டு போவது திண்ணம்; கிணற்றில் விழுந்தாலோ நமது பிராணன் ஒரு வேளை போகா

திருக்கவும்கூடும்; நாம் இப்பாம்பின் மூலமாய் இறப்பதே நலம்'' என்று நினைத்து, ஓடுகின்ற அவ் வரவை வாலைப்பற்றி இழுத்தார்.

அது 'புஸ்' என்று சீறிக்கொண்டு, கண்களில் கனல் காலத்திரும்பி, ஒரு முழ உயரம் படத்தைக் கிளப்பி, சடையனை அறையப் போயிற்று. "ஆ! ஆ! இது தான் நாம் விரும்பியது'' என்று அவர் அக

மகிழ்ந்து, அந் நாகத்தின் வாலைப் பின்னும் பலமாக முறுக்க, அது சீண்டுவதை விட்டு, தன் சுடிகையி லிருந்த ரத்தினத்தைக் கக்கி விட்டு, எப்படியோ அவர் கையினின்றும் தப்பித்துக் கொண்டு, புற்றில் நுழைந்து விட்டது.

மாணிக்கம் பெற்ற சடையர் தூதனிடம் அதைக் கொடுத்தனுப்பி விட்டு, "ஆ! ஆ! என்ன

ஆச்சரியம், என்ன ஆச்சரியம்! பகவான் 'இவன் சாவக்கூடாது' என்று சங்கற்பித்தமையா லல்லவா நாம் சாவை வருந்தி அழைத்த போதிலும், வாராது அது போயிற்று? இதைவிட ஒருவன தற்கொலை புரிந்து கொள்ள என்னதான் அதிகம் செய்யக்கூடும்? ஒன்றும் நமது செயலன்று'' என்று எண்ணிக்கொண்டு, பின்னும் பகவானிடத்து அதிக அன்பு பூண்டவராய் ஒழுகினர்.

---

4. "பொருந்துவன போமினென்றால் போகா" "சாவாரை யாரே தவிர்ப்பவர்?"

மகா நாகரிகர்களான பூர்வகாலத்து க்ரேக்கர் (Greeks) களில் அச்சிலீஸ் (Achilles) என்றொரு ரணவீரனுண்டு. அவன் குழந்தையா யிருந்த காலத்து ஓர் அசரீரவாக்கு, "இவன் அம்பேறுண்டு கட்டிளமையில் இறப்பான்'' என்று பிறந்தது. அதைக்கேட்ட அவன் தாயான தெடிஸ் (Thetis) என்ற அப்ஸரஸ் மிக வருந்தி, தன் மகனுக்கு அந்த அகாலமரணம் ஸம்பவியாதிருக்கச் செய்யும் உபாயம் யாதெனச் சிந்தித்து, அக் குழந்தையின் சரீரத்தை ஆயுதங்கள் ஊறு செய்யாதவாறு வச்சிரமாக்குவதே காரியமெனத் துணிந்தாள். அதற்காக அவள் அக்குழந்தையின் குதிகாலைப் பற்றித் தலைகீழாகத் தூக்கி, ஸ்டைக்ஸ் (Styx) என்ற பாதாள கங்கையில் அமுக்கி எடுத்தாள். அந்த நதி நீரின் பிரபாவத்தால் அச்சிலீஸ் உடனே வச்சிர தேகனாகி, எவ்வகைப் படையினாலும் தீங்குசெய்யப் பெறாமல் மிக்க பராக்கிரமசாலியாய் விளங்கினன்.

ஒருகால் அவன் பல வீரருடன் டிராய் (Troy) கோட்டையை முற்றி இருந்தபோது, அவனது பராக்ரமத்தால் பல்லாயிரம் ரணவீரர் தோற்று மாண்டு போக, பாரிஸ் (Paris) என்ற ஒரு வீரன் அந்த அச்சிலீஸைக் கொல்லும் உபாயத்தை எண்ணுவாருயினன். எவ்வகை அம்பாலும் அச்சிலீஸ் சரீரம் துளைபடாமையைக் கண்டு, அவன், "இவ்வீரன் மெய்யில் எப்பாகம் துளை யுண்ணும்?" என்று ஆலோசித்து, நெடுநேரம் சிந்தித் திருந்த பிறகு, "ஆ! ஆ! ...டிஸ்தேவி இவ் அச்சிலீஸ்வின் குதிகாலைப்பற்றி அல்லவோ ஸ்டைக்ஸ் நதியில் அமுக்கினள். அவள் கைப்பற்றி யிருந்த இடம் நீரால் நனைந்திராதே! அப்பாகம் ஆயுதத்தால் காயம் அடையுமே! அதைச் சோதிப்பம்" என்று துணிந்து, ஓரம்பால் குதிகாலிற் குறிவைத் தெய்தான். எய்யவே, அவ்விடம் அவன் நினைத்தபடி அம்பேறுண்டு காயம்பட, அச்சிலீஸ் அரவம் தீண்டியவன்போல மயங்கி விழுந்து மாண்டான். அதைக் கண்ட அவன் தாய், "ஐயோ! நான் என்ன முயன்றும் என் மகன் பிழைத்திலனே! ஸம்பவிப்பது ஸம்பவித்தே தீருமோ! எவராலும் பகவத் ஸங்கல்பம் மாற்றற்கு அரிதோ?!' என்று சொல்லிப் புலம்பி வாடி வருந்தினள்.

---

5. "தேட்டம் மரியாதை காணும்"

மரியாதை ராமன் என்ற சிறந்த நீதிபதி இளம் பிள்ளையா யிருக்கையில், ஒருகால் தனது தகப்பனர் கொடுத்த சில மாங்கனிகளைக் கொண்டு போய், மகாராஜாவான ராயரது மைத்துனரும் இரண்

டாம் மந்திரியுமான வெங்காஜி ராயரிடம் கொடுத்து விட்டு வரப் போனான். அந்த ராயர் தமது மாளிகையின் அறையில் சிறந்த ஓர் ஆசனத்தின்மீது அமர்ந்திருந்து, ஏதோ படித்துக்கொண் டிருக்க, கண்ட நமது ராமன் அவரை அணுகி, தன்னை அவர் பார்த்த பிறகு வந்த காரியத்தைச் சொல்லலாம் என்று, பழத் தட்டும் கையுமாக நின்றுகொண் டிருந்தான்.

அப்படி அவன் நின்றுகொண் டிருப்பதை அவ் விராயர் அறிந்திருந்தும், செருக்கினால் ஒரு நாழிகை வரையில் அவனை அவர் நிமிர்ந்து பாரா[illegible] படித்துக்கொண்டே யிருக்க, அந்த அவமரியாதையினால் கோபங் கொண்ட ராமன், "ஓ! ராயரவர்காள்! எனது பிதா இந்த மாங்கனிகளை உமக்கு அனுப்பினார். பெற்றுக்கொள்ளும்; நான் போக வேண்டும்" என்றான். இப்படி அச் சிறுவன் வெடு வெடுப்பாய்ச் சொன்னது தமது அந்தஸ்துக்குக் குறைவாகுமென்று கருதிய ராயர், "ஓ பையா! இதுதானா அடா, நீ கற்ற மரியாதை! உன் தகப்பனார் உன்னைப்பற்றிப் புகழ்ச்சியாகப் பலதரம் பேசி யிருக்கிறாரே. இப்படிச் செய்தையே நீ; பெரியோரிடம் நடந்து கொள்ளும் முறையை அறியாயோ? கற்பிக்கிறேன்; பார்" என்று, எழுந்து, தமது ஆஸனத்தில் அவனை அமர்வித்து, தட்டோடும் மாம்பழத்தை எடுத்துக் கொண்டு, அறைக்கு வெளியே சென்று, மறுபடி மெல்லக் கதவைத் திறந்து, வணங்கிய உடம்புடன் உள் நுழைந்து, சற்றுத் தூரத்தே பணிவுடன் நின்றுகொண்டு, "அடியேன் தகப்பனார் இந்த அற்பத்தை அங்கீகரிக்கும்படி பிரார்த்தித்தார். தயை செய்யவேண்டும்" என்றார்.

உடனே ஆஸனத்தின் மீதிருந்த ராமன், "அப்படியா! அவரை நான் குசலம் விசாரித்ததாகச் சொல்லு; இந்தா இதில் இரண்டு பழம் எடுத்துக் கொள்; கொஞ்சம் தீர்த்தம் அருந்துகிறையா?" என்று பதில் மரியாதை செய்தான்.

அதைப் பார்த்ததும், வெங்காஜி ராயர் தன் குற்றத்தை உணர்ந்து வெட்கமுற்று, "ஆ! ஆ! இளைஞா! உன்னை நான் அறியாமல் போனேன்! நான் உனக்கு மரியாதை கற்பிக்க வந்தேனே! என்ன மடமை! எனக்கு நீ கற்பித்ததன்றோ உண்மையான மரியாதை? நானே மரியாதை அறியாதவன்; நீயே எல்லாம் அறிந்த பண்டிதன்" என்று, அவனைத் தழுவி முத்தமிட்டு, தமது பல்லக்கில் ஏற்றி, வீட்டுக்கு அனுப்பினர்.

---

6. "சால ஒழுக்கம் உயர்குலத்தில் நன்று"

தஞ்சாவூரில் வசித்த ஓர் ஏழை வைதிகப் பார்ப்பான் அழகில் மிக்கவனாகிய பத்துவயதுள்ள தனது குமாரனை அழைத்துக் கொண்டு, கங்காஸ்நாநத்தின் பொருட்டுக் காசிக்குப் போயிருக்கையில், அந்த க்ஷேத்திரத்திலுள்ள பணக்காரனாகிய ஒரு பிராமணனது மனையில் தங்கினான். அச்செல்வமுடையோன் நெடுநாளாய்ப் புத்திரப் பேறில்லாமல் வருந்தியவனாதலால், இவ்வேழைப் பார்ப்பான் புதல்வனை நோக்கியவளவில், அக்குமாரன் மீது மிக்க ஆசை கொண்டவனாய், அவ்வந்தணனை நோக்கி, "கிழவரே! எனக்கு ஒரு கோடிக்குமேல் ஆஸ்தியிருக்கிறது; ஆனால் புத்திரனோ இல்லை;

உமது குமாரன் அழகும் குணமும் உடையவனு யிருத்தலால், அவனைத் தத்து எடுத்துக்கொள்ள லாம் என்று எண்ணியிருக்கிறேன்; அவனுக்கு என் தமக்கை குமாரியான இந்தக் கன்னிகையை மணம் புரிவிக்கலாம் என்றும் ஆலோசித்திருக் கிறேன்; நீர் ஒரு லக்ஷ ரூபாவை வாங்கிக்கொண்டு, இந்தப் புத்திரனை எனக்குத் தத்துக் கொடுப் பீரா?'' என்றான்.

ஏழைப் பிராமணன், "அந்தணரே! அடியே னுக்கு இவன் ஒரே குமாரன்தான்; எனக்கோ மனைவியில்லை; வேறு விவாஹம் செய்து கொண்டா லும் நான் கிழவனுதலால், எனக்குப் புத்திரனுண் டாகமாட்டான்; ஆதலால், இவனைக் கொடுக்க முடி யாது'' என்று மறுத்துவிட்டான்.

பணக்காரன் பலதரமும் வேண்டிக்கொள்ள, வைதிகப் பார்ப்பான் கூடவே கூடாதென்று மறுத்துவிட்டமையால், அந்தப் பணக்காரனுகிய லௌகிகன், அந்தப் பையனைத் தனியே கூப்பிட்டு, நகைகளையும் ஆடைகளையும் ஏராளமாகக் காட்டி, "பையா! நீ உன் தகப்பன் வீட்டில் வயிறு நிறையச் சாப்பிடக்கூட உணவில்லாமல் வருந்துகிறையே! காலால் நடந்து, தேசந்தேசமாகத் திரிகிறையே! வீடுதோறும் பிச்சைக்குப் போகிறையே! எனக்கு மகனுக ஆய்விட்டால், பல்லக்கிலும், வண்டியிலும் ஸவாரி செய்யலாமே; நல்ல நல்ல உணவுகளைப் புஜிக்கலாமே; விதம் விதமாக உடுக்கலாமே; உனக்குப் பலவகையான ஆபரணங்களும் அணியக் கிடைக்குமே; இந்த ஸௌந்தரியையும் நீயே கல்யா ணம் செய்து கொள்ளலாமே; மூன்று மாடங்

களுள்ள என்வீட்டில் நீ ஸுகமாக வஸிக்கலாமே" என்று பலவாறு பலநாளும் போதித்து வந்து, அவனோடு அன்புடன் பேசுவதாலும், அதி மதுரமான உணவுகளைக் கொடுப்பதாலும், பல்லக்கு முதலிய வாகனங்களில் ஏற்றுவித்துக் கொண்டு ஊர்விநோதங்களைக் காட்டுவதாலும், அச் சிறுவனை மயக்கித் தன் வசமாக்கிக் கொண்டான்.

இப்படி இருக்க ஒருநாள் வைதிகன் தனது ஊருக்குப் புறப்பட நினைத்து, குமாரனை எங்கும் தேட, அவனைக் காணுமையால் வருந்தி, கடைசியில் பணக்காரனைக் கேட்க, அவன் வைதிகனைப் பலவாறு நிந்தித்து, "போ, போ! உனக்குக் குமாரனேது?" என்று துரத்திவிட்டான். பிள்ளை யிழந்த பார்ப்பான் கண்ணும் கண்ணீருமாகப் போய் அவ்வூர் அரசன் பால் வழக்கிட, மன்னவன் அந்தப் பணக்காரப் பிராமணனையும் அந்தப் பிள்ளையையும் ஸபைக்கு வருவித்து விசாரிக்குமளவில், அப்பணக்காரன், "ஐய! இச்சிறுவன் எனது குமாரனே" என்று சாதித்தான்.

சிறுவனும் பண மயக்கத்தால் தான் பணக்காரன் மகன்தான் என்று கூறினான். அல்லாமலும் பணக்காரன் பல பொய்ச் சாக்ஷிகளுக்கும் பரிதானம் கொடுத்து, அப்பிள்ளையைத் தன் குமாரன் தான் என்று சொல்லும் படியாகவும் செய்துவிட்டான். அதனால், நியாயாதிபதி சாக்ஷியில்லாத ஏழைப் பிராமணன் சொல்லை நம்பக் கூடாமல், என்ன செய்யலாமென்று ஆலோசித்து, கடைசியில் அச் சிறுவனைத் தன்னிடத்தில் நிறுத்திக் கொண்டு, உபயவாதிகளையும் சூரியாஸ்தமனத்திற்கு

இரண்டு நாழிகைக்கு முன் வரும்படி சொல்லி அனுப்பினான்.

அவர்கள் அப்படியே அந்நேரத்துக்கு வந்ததும், அவர்களோடும் அப் பிள்ளையோடும் ராஜன் லோகாபிராமமாகப் பலப் பலவும் பேசிக்கொண்டிருந்து, சூரியன் மலைவாயில் விழுந்ததும், "ஸரி; நாம் போஜனம் செய்தானபிறகு இவ் வழக்கைப் பற்றிப் பேசுவோம்" என்று சொல்லி, மூவரையும் போஜன மண்டபம் அழைத்துச் சென்று, அன்ன முதலிய எல்லாம் பரிமாறிய இலையில் தான் முதலில் உட்கார்ந்து, மற்றவரையும் உட்காரச் சொன்னான்.

உடனே லௌகிகப் பிராமணன் கைகால் சுத்தி செய்யாமலும், ஸந்தியாவந்தனம் செய்யாமலும், இலையில் உட்கார, வைதிகப் பிராமணனும் அவன் குமாரனும் கை கால்களைச் சுத்தம் செய்துகொண்டு, ஸந்தியா வந்தனத்துக்கு ஆரம்பித்தார்கள்.

இந்த அந்தண ஒழுக்கத்தால், அரசன் அப் பிள்ளை வைதிகனதுதான் என்று அறிந்து, சாப்பாடு முடிந்ததும், பணக்காரனை வைது பயமுறுத்தி, அவன் வாயாலேயே உண்மையை அறிந்து, வைதிகனிடத்து அவன் குமாரனை ஒப்படைத்தான்.

தனது குல ஒழுக்கத்தைக் கைவிடாத பிராமணன் இழந்துபோன தனது அருமைக் குமாரனைத் திரும்பவும் பெற்று, மிக்க மகிழ்ச்சியுடன் ஊர் சென்றடைந்தான்.

7. "வேட்டேனவை மேத்தேனவை வெல்லாவாம்"

காசிதேசத்தில் அரசு புரிந்து வந்த அருளாளனென்ற அரசன் மிகவும் நல்லவனுய், தனது குடிகளிடத்து வரம்பு கடந்த அன்புகொண்டு, அவர்கள் எக்குற்றஞ் செய்தாலும் பொறுத்து, அவர்களுக்கு ஹிதோபதேசமே செய்து, நல்வழிப்படுத்திவந்தான். அதை லாட தேசாதிபதியான மத்தகாலனென்பவன் கண்டு, மனம் பொருது, அவ்வருளாள மன்னனை வதைத்து, அவன் நாட்டைக் கைப்பற்றிவிடவேண்டுமென்று கெட்ட எண்ணம் எண்ணிக்கொண்டு, தன்னை ஒத்த கொடியர்களான தனது மந்திரிகளோடு ஆலோசிப்பானுயினுன். அம்மந்திரிகளில் முதல்மந்திரி, "அரசே! அருளாளமன்னன் மிகவும் பலவான்; அவன் தனது குடிகளால் மிகவும் அன்பு பாராட்டப்படுகிறுன்; குடிகளது அன்பைப் பெற்ற அரசனை வெல்வது யாரால் சாத்தியம்? அருளாளனை வெல்ல வேண்டுமென்ருல், அவன் மீது அவன் குடிகளுக்கிருக்கும் அன்பைக் குறைக்கவேண்டும்; அது எப்படிக் கூடும்?" என்ருன்.

உடனே இரண்டாம் மந்திரி எழுந்து, "அரசே! முதன் மந்திரியார் சொல்லுகிறபடி குடிகளின் அன்பைக் கொள்ளைகொண்ட அரசனை வெல்வது முழுவதும் கூடாத காரியமே; ஆனுல், அருளாளன் மீது அவன் குடிகள் வைத்திருக்கும் அன்பைக் குறைக்க ஓர் உபாயமுண்டு; நாம் கள்வர் கொலைஞர்களை அவன் நாட்டிற்குப் பலதரமும் அனுப்பி, கொலை களவு செய்து வரும்படி ஏவினுல், அருளாளன் அவர்களைப் பிடித்தாலும், யாதொரு சிக்ஷையும்

செய்யாமல் அனுப்பிவிடுவான். அப்படி அவன் பல தரமும் நமது ஒற்றரைச் சும்மா அனுப்பிவிடுவதை அவன் குடிகள் பார்த்து, அவன்மீது வெறுப்புறு வர். பிறகு நமது எண்ணம் பலிக்கும்'' என்றார்கள்.

கேட்ட அரசன், "இது தகுதியான ஆலோசனை'' என்று உட்கொண்டு, நூறு கொலைபாதகர்களை காசிமா நகரத்தில் கொள்ளையடித்து வரும்படி அனுப்பினான். அவ்வாறே அவர்கள் அப்பட்டணம் வந்து, கொடிய பல கொலைகள் செய்தும், சுட்டும் எரித்தும், ஏராளமான பொருளைக் கவர்ந்தும் சென்றார்கள்.

ஆனால், அருளாளனது சேவகர்களோ அக்கொள்ளைக்காரரை விடாது துரத்திப் பிடித்து, தமது அரசன் முன் கொணர்ந்துவிட, அரசன் அவர்களை இனிய முகத்துடன் குளிர நோக்கி, "நல்ல ஜனங்களே! நீங்களேன் இப்படிச் செய்தீர்கள்?'' என்றான். அதற்கு அவர்கள், "வேந்தே! எங்களுக்கு வயிற்றுப் பசி மிகுதியாயிருந்தது; அதனால் அப்படிக கொள்ளையிட்டோம்; இடையில் எம்மைத் தடுத்தாரை நாங்கள் கொல்லவேண்டியதாயிற்று'' என்றார்கள்.

அருளாளன், "ஐயோ! பசியினால் கிரம்பவும் வருந்தினீர் போலும்! ஆனாலும், நீங்கள் என்னிடத்து வந்து, குறை சொலலிக் கொண்டிருக்கவேண்டும்; இருந்தால், நிறையப் பொருளளித் திருப்பேன்; அது போகட்டும்; இதோ பதினாயிரம் வராகன் இருக்கிறது; ஆளுக்கு நூறு வராகன் விழுக்காடு பகிர்ந்து கொள்ளுங்கள்; இனி இந்தத் தீய தொழிலையே விட்டு விடுங்கள்'' என்று, கொடுத்தான்.

பெற்றுக்கொண்ட அவர்கள் அருளாளனது நற்குணத்தால் வசியஞ் செய்யப்பெற்று, அவன் திருவடியில் விழுந்து எழுந்து, "பிரபோ! இன்று முதல் நாங்கள் எமது தீத்தொழிலை விட்டோம், விட்டோம்" என்று சொல்லிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களுக்கு மறுபடி லாடதேசம் போக இஷ்டமில்லை; காசியிலேயே தங்கி, நல்வழியில் பொருளீட்டி, உண்டு வாழ்ந்திருந்தார்கள்.

இங்கு இவர்கள் இப்படியிருக்கையில், லாட வேந்தன் தனது ஒற்றர் நெடுங்காலமாகத் திரும்பி வாராமையால், அவர் மீது சினங்கொண்டு, வேறு நூறு கொடியவரைக் காசியில் கொள்ளை யடித்து வரும்படி ஏவினன். அவர்களும் வந்து, கொள்ளை கொண்டு மீளும் சமயத்தில், ஊர்க் காவலரால் பிடியுண்டு, வேந்தன் முன் கொண்டு போய் விடப் பெறவே, அவர்களும் முன் வந்தார் போலவே ஸம்மானம் செய்யப் பெற்று, நற்குண முடையவராய் மாறி, காசியிலேயே தங்கி விட்டார்கள்.

லாடவேந்தன் இப்படியாக தன் எண்ணம் இரு முறை நிறைவேறாதது கண்டு, வேறு பல கூட்டக் கொள்ளைக் காரரை ஏவ, அவர்களும் காசிராஜன் செய்கையால் தீத் தொழில்களை மறந்து, ஸத்புருஷர்களாயினர். அதன் பிறகு மத்தகாலன் தானே நேரில் போய், காரியத்தை முடிக்கலா மென்று, மாறுவேஷம் தரித்துக் காசி நகரில் ஓர் இரவில் நுழைந்தான்.

ஒவ்வொரு வீதியாகச் சுற்றிக்கொண்டு, அரண்மனைக்கு அருகில் அவன் வர, ஆங்கு வந்து கொண்டிருந்த லாடதேசத்துப் பழைய கொள்ளைக் கார

ரில் ஒருவன், அம்மன்னனை அடையாளங் கண்டு பிடித்து, நையப் புடைத்து, காவலில் இடுவித்து, மறுநாள் விடிந்ததும், அருளாளன்பால் அவ்விலாட வேந்தனைக் கொண்டு போய் நிறுத்தி, "ஓ! நர்பதி! இந்த மகா பாபிதான் எங்களை உமது தர்ம ராஜ்யத்தில் கொள்ளை யடிக்கும்படி தூண்டியவன்; இவன்தான் தர்மதேவதையான உமது நாட்டைக் கைப்பற்றிக் கொள்ள முயலுபவன்!" என்றான்.

கேட்ட அருளாளன் உடனே சிங்காதனத்தினின்றும் குதித்து இறங்கி ஓடி வந்து, லாடபதியைக் கையைப் பிடித்துத் தன் சிங்காதனத்தினண்டை அழைத்துச் சென்று, "லாடேச்வரா! நீர் இப்படி யெல்லாம் ஏன் செய்ய வேண்டும்? உமக்கு எனது ராஜ்யத்தின் மீது விருப்ப மிருந்தால், உடனே எனக்கு ஒரு நிருபம் எழுதி யிருக்கக் கூடாதா? நான் அந்த க்ஷணமே இந்த ராஜ்யத்தை உமக்கு அபிஷேகம் செய்து விட்டிருப்பேனே! இப்போதும் மோசம் இல்லை; இந்த ராஜ்யாதி பத்தியத்தை நீரே ஏற்றுக் கொள்ளலாம்; ஏறும் சிங்காதனத்தில்; இந்த என் முடியைத் தரித்துக் கொள்ளும்; இந்த முத்திரை மோதிரத்தை அணிந்து கொள்ளும்" என்று வேண்டுவானாயினன்.

ஸபையிலுள்ள மந்திரி பிரதானிகளும் மற்ற ஜனங்களும், "ஆ! ஆ! இஃதென்ன ஆச்சரியம்! இஃதென்ன ஆச்சரியம்!" என்று கோஷித்தார்கள். லாடமன்னன் இவற்றை எல்லாம் பார்த்துப் பிரமித்துப்போய், மிக்க வெட்கமும், பச்சாத்தாபமும் உடையவனாய், அருளாளன் பாதங்களில் வீழ்ந்து, "ஹே! உத்தம ராஜனே! என்றைக்கும் வாராத

புத்தி இன்றுதான் எனக்கு வந்தது; நீரே உலகம் முழுதும் ஆள அருகராவீர்! உம்மைக் கெடுக்க எண்ணினேனே; என் கொடுமை இருந்தவாறு என்? எனது நாட்டிற்கும் நீர்தாம் அதிபதி; நான் உமது கடைவாசலில் இருந்து சேவகம் செய்துகொண்டு உயிர் வாழத் துணிந்து விட்டேன்; என்னுடைய ஸகல ஸொத்தையும் அங்கீகரிக்கப் பிரார்த்திக்கிறேன்'' என்று சொல்லி, அருளாளன் பாதத்தில் வீழ்ந்து, அவன் என்ன தடுத்துச் சொல்லியும்கேளாமல், சேவகர் உடையைத் தரித்துக் கொண்டு, உருவிய வாளுடன், அருளாளனது அரண்மனை வாசலில் வாயிற் காவலனுய் அமர்ந்து விட்டான்.

தனது மெத்தென்ற சுபாவத்தால் பகையாளுர் எல்லாரையும் ஜயித்த அருளாளன், எல்லா ஜனங்களும் போற்ற நெடுங்காலம் இன்புற்று வாழ்ந்தான்.

---

8. "நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே சீர் ஒழுகு சான்றோர் சினம்"

பொன் விளைந்த களத்தூரில் பிறந்த புகழேந்திப் புலவர் மதுரையில் பாண்டியனது ஸமஸ்தான வித்துவானு யிருந்த காலையில், அவருக்குச் சோழனது ஸமஸ்தான வித்துவானுன ஒட்டக்கூத்தரோடு விவாதம் நேர்ந்தது. அவ்விவாதத்தில் ஒட்டக்கூத்தரைப் புகழேந்தியார் ஜயித்து விட்டார். தோல்வியுற்ற ஒட்டக்கூத்தர் மனமுளைந்து, எப்படியாவது அப் புகழேந்தியைத் தம் வசமாக்கி, ஹிம்ஸிக்க வேண்டுமென்று முடிவு செய்து கொண்டார்.

அவரது எண்ணத்திற்கேற்ப, பாண்டியன் தன் மகளைச் சோழனுக்கு மணம் செய்து கொடுத்த காலையில், தன் மகளுக்குக் கொடுத்த பலப்பல உயர்ந்த வரிசைகளோடு தனது ஆஸ்தான வித்துவானன புகழேந்தியையும் கொடுத்து விட்டான். சோழன் நாடு வந்து சேர்ந்த புகழேந்தியார் முதலில் சோழனுல் கௌரவிக்கப் பெற்றனரேனும், பிற்பாடு ஒட்டக்கூத்தரது சூழ்ச்சியால் சிறையிலடைக்கப் பெற்றார்.

அச்சிறையில் அவர் நெடுநாள் கிடந்து வருந்திய பிறகு, சோழன் மனைவியான பாண்டியன் மகளால் அவர் சிறை விடுக்கப்பெற்று, சோழநாட்டிலேயே தங்கினர்.. ஆனல் ஒட்டக்கூத்தர் செய்த பல இடையூறுகளால் அவர் அங்குத் தரியாது, மள்ளுவ நாட்டை அடைந்து, அவ்வூர் அரசன் வேண்டுகோளால் நளனது சரிதத்தை வெண்பாவால் பாடினர். அக்காப்பியம் வெகு அழகாயும் சொற்சுவை பொருட்சுவை மலிந்ததாயு மிருக்க, அதைப் புகழேந்தியார் சோழன் ஸபையில் அரங்கேற்றினர். கம்பர் முதலிய புலவர்கள் அந்நூலை மிகவும் சிறந்த தென்று கொண்டாட, ஒட்டக்கூத்தரோ பழைய பகைமையே கொண்டாடி, அக்காப்பியத்தைத் தூஷிக்கத் தொடங்கினர். அதனுலும், அதற்கு முன்பு அவ்வொட்டக்கூத்தர் தமக்குச் செய்து வந்த பல கொடுமைகளாலும் புகழேந்தியார் அடங்காக்கோபம் கொண்டு, அக்கூத்தரைக் கொன்று விடுவதே காரியமெனத் துணிந்து, ஒரு நாள் இரவில் வாளும் கையுமாக அவரது இல்லத்தில் நுழைந்தார்.

அப்போது படுக்கை அறையில் தமது மனைவியோடு பேசிக்கொண்டிருந்த ஒட்டக்கூத்தர், "ஆ! ஆ! என் காதலீ! நானும் ஒரு வித்துவானோ? என் கல்வியும் ஒரு கல்வியோ? அப்புகழேந்தியினது நளவெண்பாப் பாட்டில் ஒரு பாட்டிற்கு இவ்வுலகத்தையே பரிசாக அளித்தாலும் பற்றாதே" என்றும், மற்றும் பலவாறும் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தார்.

ஒளிந்து நின்று கேட்டிருந்த புகழேந்தியார் மிக்க ஆச்சரியம் அடைந்து, "இது என்ன புதுமை! பலர் முன்னிலையிலும் நம்மைப் பழிக்கும் இப்பாவி, நம்மிடத்து இவ்வளவு அந்தரங்க விச்வாஸமுடையனோ?" என்று நினைத்து, தன்னை அவன் படுத்திய பாட்டையெல்லாம் அந்த க்ஷணத்திலேயே மறந்து, பிடித்த வாளையும் வீசி எறிந்து விட்டு, ஓட்டமாக ஓடிச் சென்று, ஒட்டக் கூத்தரைக்கட்டிக் கொண்டு, "என்னை நீர் மன்னிக்க வேண்டும்; உமக்குப் பெரிய அபராதத்தைச் செய்து விட்டேன்; நீர்தாம் சிறந்த வித்வான்; எனக்குச் சிறந்த தோழனும் நீர்தாம்; 'நேசனைக் காணவிடத்து நெஞ்சாரவே துதிக்க வேண்டுமென்பதுபோல நீர் செய்தீர்; இதுமுதல் உம்மை நான் விரோதி என்று நினைத்த எண்ணத்தை விட்டேன், விட்டேன்; உம்மை நான் கொன்றிருந்தால், தலைமுறை ஏழுக்கும் பழி என்னைச் சுற்றாது விடுமா?" என்று வருத்தமாய்ச் சொல்லி, அக் கூத்தரோடு அது முதல் விள்ளா நட்பினராயினர்.

---

9. "தார்வேந்தர் கேட்டால் மனஞ்சிறிய ராவரோ"

"வயிறு வளர்க்கைக்கு மான மழியாமை
உயிர்விடுகை சால உறும்"

சேரநாட்டில் அரசு செய்து வந்த 'சேரமான் கணைக்காலிரும்பொறை' என்ற சூரனுக்கும் சோழ நாட்டில் அரசு நடாத்திய சோழன் செங்கணனுக்கும் பகை மூள, கோயில் வெண்ணி என்ற விடத்தில் இருவருக்கும் யுத்தம் நடந்தது. அந்தப் போரில் சேரமானைச் செங்கணன் வஞ்சனையால் கைப்பற்றி, அவன் படையைச் சின்னபின்னமாக்கி விட்டு, தனது நாட்டிலுள்ள குடவாயிற் கோட்டத்தில் அச்சேரமானை அடைத்து விட்டான்.

மானமென்னும் அரிய ஆபரணத்தை இழந்து செயலொழிந்து, மந்திரத்தால் கட்டுண்ட சர்ப்பம் போலச் சீறிக் கொண்டிருந்த அம்மன்னன் சிறைக் கோட்டத்தில் நெடுநேரமாக உணவாவது நீராவது கிடைக்கப் பெறாமல் வருந்தி, களைப்பினால் சிறைக் காவலரை நோக்கி, "தாகத்துக்கு நீர் தா" என்று கேட்டான்.

அச்சிறைக் காவலர் சக்ராதிபதியாக விருந்த ராஜச்ரேஷ்டன் கேட்கிறானே என்ற மரியாதையும் தயையும் அற்று உடனே ஓடிப்போய் நீர் கொணர்வதைவிட்டு, சிறிது தாழ்த்துச் சென்று, நீர்கொண்டு வந்து கொடுக்க, அதை வாங்கிக்கொண்ட, அவ்வேந்தன் "சிச்சீ! நான் போரில் இறந்துபட வேண்டியவன் என் உயிருடன் பிணிப்புண்டேன்? நாய்க்கும் எனக்கும் என்ன வித்தியாஸம்! அன்பிலாதார் கொடுத்த இந் நீரை நான்

பருகுவேனே! மான மிழந்தவனன்றோ பருகுவான்? அப்படி உண்ணும் ஒருவனை ஒருத்தி பெறுவதினும் இறந்தே பிறந்த ஒரு குழவியைப் பெற்று

னும், மாம்ஸ பிண்டமாகிய மனையைப் பெற்றாலும் நலமே" என்று சொல்லி, அந்நீரைத் தரையிலூற்றி விட்டு, தாகத்தின் கொடுமையால் உயிர் விட்டான்.

---

10. "மாசற்ற நெஞ்சுடையார் வன்சொ லினிது"

கலிங்கப் பட்டணத்திலிருந்த ஓர் அரசன் தன் மாளிகையின் மேல் மாடத்தி லிருந்துகொண்டு, தனது மனைவிக்கு நல்ல ருசியுள்ள மாங்கனி ஒன்றை அரிந்து கொடுத்துக் கொண்டிருக்கையில், பேச்சுப் பராக்கில் தனது சுண்டுவிரலை நறுக்கிக்கொண்

டான். துண்டித்து விழுந்த அவ்விரலைக் கண்டு அம் மன்னவன் வெகு விசனமுற்று, "ஹா! ஹா! நாம் அங்கஹீனனாய்ப் போய்விட்டோமே! நமது சரீரத்தில் லக்ஷணக் குறைவு ஒன்றுமில்லையென்று நாம் இறுமாந்திருந்தது போக, நொண்டிராஜனென்று பலரும் நம்மைப் பரிஹஸிக்கும்படி நேர்ந்ததே" என்று புலம்பி, தன் குருவான ஒரு ஸாதுவிடம் போய், தனக்கு நேர்ந்ததைச் சொன்னான்.

கேட்ட அந்த ஞானி, "ஹா! ஹா! இப்பொழுதுதான் எனக்கு ஸந்தோஷமாயிருக்கிறது. உனக்கு இது வேண்டும், வேண்டும்! போ, போ!" என்று சொல்லி, நகையாடினார். கேட்ட ராஜன் வெகு கோபம் கொண்டு, "ஓ! முனீ! உன்னை நான் குருவாகக் கொண்டு இத்தனைநாளும் மரியாதை பண்ணினதற்கு இதுதானா நீ செய்த பிரதி! துன்புற்று நான் உன்னை அடைந்தால், என்னைப் பரிஹாஸம் செய்தையே!" என்று சொல்லி, சேவகரைக் கூப்பிட்டு, "இந்தப் பொய் ஞானியைச் சிறையிலடையுங்கள்" என்று கட்டளையிட்டான். உடனே சேவகர் அவரைப் பிடித்து, விலங்கிட்டுச் சிறையிலடைத்துவிட்டனர்.

இது நடந்த ஒரு மாஸமானதும், அரசன் காட்டிற்கு வேட்டையாடப் போனபோது, வேட்டை மும்முரத்தால் தனது பரிவாரங்களினின்றும் பிரிந்துபோய், நிர்மானுஷமான ஓர் இடத்தை அடைந்தான். அப்பொழுது இருட்டிவிட, நெடுந்தூரத்திலிருந்து கொள்ளையடித்துக்கொண்டு வரும் பல வேடர்கள் அவ்வரசனைக் கண்டு, அவனது அழகைப் பார்த்து வியந்து, "ஆ! ஆ! இவனே

11. "பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு பிறர்க்குதவி ஆக்குவோர் பேறும்"

அங்க தேசத்தில் செங்கோல் செலுத்தி வந்த விந்துபதி என்னும் ஓர் அரசனுக்கு வேட்டையிலேயே அதிகப் பிரியமானதால், அவன் ராஜ்ய காரியங்களை முற்றிலும் மறந்து போய், வருஷத்தில் ஆறுமாஸ காலம் காட்டிலேயே ஸஞ்சரித்து வந்தான். அக் காலங்களில் நாட்டிலிருந்து ராஜ்ய காரியங்களைக் கவனிக்கும்படி நியமிக்கப்பட்டவனை அவ் வரசனது முதல் மந்திரியான மதியூகி என்பவன் ராஜன் பணத்தை எடுத்துச் செலவிட்டு, பல அன்ன ஸத்திரங்களையும் தரும பாடசாலைகளையும், ரஸ்தாக்களையும் குளங்களையும், ஆறுகளையும் பாலங்களையும் நாட்டில் நிறைவித்து, காடுகளிலேயும் வழிப் போக்கருக்குத் தண்ணீர்ப் பந்தல், இராத்தங்க வீடு முதலிய தர்மங்களையும் செய்து வருவான். அதனால் ஜனங்கள் யாவரும் அம் மந்திரியை மிகவும் கொண்டாடி, தமக்குள் நேரும் வழக்குகளையும் குறைகளையுஞ் சொல்லிக் கொள்வார்கள். மதியூகியோ சிறிதும் சோம்பலில்லாமல் வரும் அவ் வழக்குகளை எழுமுறை கேட்டு, உபய வாதிகளும் உளம் களித்துத் திரும்பும்படி தீர்ப்பளித்து, தர்மமாய் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான்; அதனால் அம் மதியூகிக்குத 'தர்மதாஸன்' என்றபேர் வழங்கத் தலைப்பட்டது. தலைப்படவே, அவன் செய்த எல்லாத் தருமங்களுக்கும் 'தர்ம தாஸர் தருமம்' என்று பெயர் வழங்கலாயிற்று. ஜனங்களுக்கும் மற்ற ராஜாக்களுக்கும் விந்துபதி என்ற அந்த நாட்டு அரசனையே தெரியாது போயி

தக்க புருஷன்! இவனையே நாம் நமது காளிக்குப் பலியிட வேண்டும்" என்று சொல்லிக்கொண்டு, அவனைப் பிடித்து, சமீபத்திலிருந்த ஒரு காளி கோயிலுக்கு இழுத்துச் சென்றார்கள்.

காளி ஸந்நிதியில் அவர்கள் தோத்திரங்கள் முதலிய எல்லாம் செய்து, தூபதீபங்கள் காட்டிய பிறகு, அவ்வரசனை வெட்டப் போகையில், ஒரு வேடன் மேல் ஆவேசம் வந்து, "ஒ மூடர்காள்! நீங்கள் எனக்கு எல்லா அங்கலக்ஷணமும் உள்ள ராஜனைப் பலிதருவதாய்ச் சொல்லிவிட்டு, இப்பொழுது இந் நொண்டி மன்னனைப் பலிதர வந்தீரே! இப்பலியை நான் ஏற்றுக்கொள்ளேன்" என்றது. உடனே அந்த வேடர்கள் பயந்து, அக்கலிங்க மன்னனது அவயவங்களைச் சோதிக்க, அவனுக்குச் சுண்டுவிரல் வெட்டுண்டிருந்ததைக்கண்டு, "ஹா! ஹா! காளியறியாததும் உண்டோ" என்று சொல்லி, அம்மன்னனை விட்டுவிட்டனர்.

வேடர் கையினின்றும் தப்பிய வேந்தன், "ஹா! ஹா! அந்த ஸாது இதை எண்ணியே 'உனக்கு இது வேண்டும் வேண்டும்' என்று சொல்லி ஸந்தோஷப் பட்டார். அவர் பரிஹாஸமாய் நகைக்கவில்லை; நாம் அவரது கருத்தை அறியாது போனோம். எப்படியும் நல்லோர் சொல்லும் வார்த்தை நன்மையாகவே இருக்கும். அது மூடர்களாகிய நமக்கு அஹிதமாய்த் தோன்றுகிறது" என்று சொல்லிக்கொண்டு, தனது பட்டணம் வந்து, சிறையிலிருந்த ஸாதுவை விடுவித்து, நடந்ததையெல்லாம் சொல்லி, அவர் திருவடியில் விழுந்து, மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

[stamp]

னது. அவ்வரசன், "சங்கீதம் கேட்பதும், வேட்டை ஆடுவதும், கூத்து நாடகங்கள் பார்ப்பதும், மதுரமான போஜனம் உண்பதுமே நாம் செய்ய வேண்டிய வேலை" என்றிருந்து விட்டான்.

ஒருகால் அவன் ஒரு காட்டில் தன் தோழர்களோடு வேட்டையாடப் போயிருக்கையில், ஒரு புலியினுல் அடியுண்டு, கீழே மூர்ச்சித்து விழுந்தான். விழுந்த அவனைக் கண்டதும், அவனது தோழர்கள் புலியின் பலத்துக்கு அஞ்சி ஓடிப் போயினர். புலியோ ஸிந்துபதியால் ஏற்கனவே நன்ருய்க் குத்தி வெட்டப் பெற்றிருந்தமையால், அதுவும் விழுந்து இறந்து போயிற்று. இந்த ஸ்திதியில் அங்கு வந்த வேறு ஒரு தேசத்து ராஜன் செத்த புலியையும் அதன் பக்கத்தில் மூர்ச்சித்துக் கிடக்கும் ஒரு புருஷனையும் கண்டு, "இவ்வீரன் அஞ்சாத தீரன்; இவனையே நாம் மெய்க் காவலனுக வைத்துக் கொள்ள வேண்டும்" என்று நினைத்து, அவனை மெல்ல எடுப்பித்து, மூர்ச்சை தெளிவித்துத் தன் ராஜ்யத்துக்குக் கொண்டுபோய், காயங்களை ஆற்றுவித்து, சேவகனுக வைத்துக்கொண்டான். ஸிந்துபதி அந்த ராஜனிடத்துத் தன் வரலாற்றைச் சொல்லாது, வேற்றுப் பேர் சொல்லி, அவ்வரசனிடத்து மூன்று மாஸ காலம் உத்தியோகம் செய்து வந்தான். அதன் பிறகு அவன், "ராஜ! நான் எனது மனைவி மக்களைப் பார்த்து நெடுநாளாயின; ஒரு தடவை பார்த்துவிட்டு வருகிறேன்; விடை தர வேண்டும்" என்று கேட்டு, உத்தரவு பெற்றுக் கொண்டு, தன் நாட்டில் நுழையவே, எங்குப் பார்த்தாலும் சத்திரமும் சாவடியும் குளமும் சோலை

யும் பாடசாலைகளும் கல்விச் சங்கங்களும் நிறைந்திருக்கக் கண்டு, "இந்தத் தர்மங்கள் யாவும் யார் செய்தவை?" என்று விசாரித்தான்.

அங்கிருந்தவர்கள், "இவ்வளவும் இவ்வூரைப் பரிபாலிக்கும் 'தர்மதாஸ ராஜா' செய்தவை; அவர் நீடுழிவாழ்க!" என்றார்கள். கேட்ட ஸிந்துபதி, "ஹா! ஹா! நமது ராஜ்யத்தை தர்மதாஸ ராஜனென்னும் ஒரு பகை வேந்தன் கைப்பற்றினான் போலும்! ஐயோ! நாம் இனி என்ன செய்வோம்! நமக்கு வந்த ஆபத்து இப்படியா?" என்று நினைத்து, அவர்களை மறுபடியும் நோக்கி, "நல்ல ஜனங்களே! இந்த ராஜன் இந்தராஜ்யத்தைக் கைப்பற்றி எத்தனை நாளாயின?" என்றான்.

அவர்கள், "என்ன அப்பா! நீ ஒன்றுந் தெரியாதவனாயிருக்கிறாய்! எங்கள் ராஜனைப் பற்றி அறியாதவனும் ஒருவன் இவ்வுலகில் இருக்கின்றான் என்று இப்பொழுதுதான் அறிந்தோம்; ஆயினும் கேள், எங்கள் தர்மதாஸர் சென்ற முப்பதுவருஷமாய் இவ்விராஜ்யத்தை ஆண்டு வருகிறார்; வேற்று மன்னன் ஒருவன் இந்நாட்டில் அடி எடுத்துவைப்பானா?" என்றார்கள். ஸிந்துபதி மிகவும் அதிசயித்து, "இது நமது அங்க நாடன்றோ?" என்று சங்கித்து, "நல்லவர்களே! நான் நெடுந்தூரத்திலிருந்து வந்தவன்; எனக்கு எல்லா விவரங்களும் சொல்லுங்கள். இது எந்த நாடு?" என்றான்.

ஜனங்கள் — "இது அங்கநாடு"

ஸிந்துபதி — "ஸிந்துபதி என்ற ராஜனல்லவோ இதை ஆண்டுவந்தான்?"

ஜனங்கள் — "தோலோ, தோல்! அந்த அசட்டு ராஜனும் ஒரு ராஜனு! அவன் பெயர் யாருக்குத் தெரியும்? ராஜ்ய முழுவதும் தர்மதாஸரதுதான்"

ஸிந்துபதி — "தர்மதாஸர் யார்?"

ஜனங்கள் — "இது தெரியாதா? அவர் மதியூகி என்ற இயற்பெயருடன் குடிகளுக்கு வெளியிலுலாவும் ஓர் உயிர்போல விளங்கும் அண்ணல்தான்."

ஸிந்துபதி — "ஹா! அப்படியா! அந்த தர்மதாஸர் அசடனுயிருந்த ஸிந்துபதியை நீக்கி விட்டாரோ?"

ஜனங்கள் — "அப்படி அவர் செய்தால்தான் நலமாயிற்றே! அவர் தினமும் அவ்வீணனை மன்னனை நினைத்துப் புலம்பிக் கொண்டு, அன்ன ஆஹாரங்களை மறந்து, நாளுக்கு நாள் இளைத்துப போகிறார். எங்கே அவர் விசாரத்தால் இறந்து போவாரோ என்று நாங்கள் மிகக்கவலைப் படுகின்றோம்"

ஸிந்துபதி — "ஆனால், நான் அவரைப் பார்க்கலாமோ! அந்த சிந்துபதியைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும்."

ஜனங்கள் — "அவ்வரசனைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் ஆகவேண்டியதில்லை. எமது தர்மதாஸரை ஸந்தோஷிப்பிக்க மாத்திரமே அவ்வரசனைப்பற்றி நாங்கள் விசாரிப்பதுண்டு; நீ ஏதோ சிறிது சொல்வதால், உன்னை தர்மதாஸர் முன்னிலையில் கொண்டுபோய்ச் சேர்க்

கிறோம்'' என்று சொல்லி, அவனை மதியூகி முன்னால் அழைத்துப் போயினர்.

மதியூகி மந்திரி அவனைக் கண்டதும் எவ்வளவு ஆனந்த மடைந்தா· னென்பதை எடுத்துக் கூற இயலுமா? காணுமற் போன குழந்தையைக் கண்ட தாய் போல ஆனந்த மடைந்து, அம்மதியூகி அரசனைப் பலவாறு உபசரித்தான். விந்துபதி, "என் அருமை மதியூகியே! ராஜ்ய முழுதும் எனதாயிருக்க, எனது பொருளை எடுத்து நீ தேசத்துக்கு நன்மை செய்து வந்தமையால், ஜனங்கள் யாவரும் உன்னையே பொருளுக்குடையான் என்று மதித்திருக்கின்றனர். நான் ஒன்றும் செய்யாமலிருந்தமையால், ஜனங்கள் என்னை மறந்தே போனர்கள்; பொருள் பெற்றதன் பயன் பரோபகாரம் செய்வது தான்; அப்படிச் செய்யும் நீதான் ராஜ்யமாள யோக்யதை உடையவன்; நான் இவ்வரசை இனி ஏற்கமாட்டேன்'' என்று சொல்லி, மதியூகியையே பட்டத்தில் வைத்து அபிஷேகம் செய்துவிட்டுத் தான் காட்டுக்குப் போய்க் கடவுளை வழிபட்டுக் கொண்டிருந்தான்.

---

12. "கடலே அனையம்யாம் கல்வியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி — விடலே"

சோழனுக்கு வித்தியா குருவும் ஸமஸ்தான வித்துவானுமான ஒட்டக்கூத்தப் புலவர் நிரம்பப் படித்தவரேனும், அடங்காத கல்விச் செருக்கு மிக்கவராய், சோழநாட்டிலிருந்த பல புலவரையும் அவமதித்து வந்தார். இப்படி இருக்கையில், அவ

யமான பாட்டைக் கேட்டு, ஆவலை விடலாமென்றிருக்கிறேன்; சற்றுப் பாடவேண்டும்" என்றது

நரி கேட்டு, "உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா? நாம் சற்றுப் பாடிவிட்டுத்தான்

நல்ல பசியோடு இதைப்பக்ஷணம் செய்வமே" என்று நினைத்து, தனது குரலை எடுத்துப் பாட ஆரம்பித்தது. உடனே பக்கத்தில் மறைந்திருந்த ஒரு வேட்டை நாய் 'குபீரெ'னப் பாய்ந்து, அந்நரியின் மேல் விழுந்து, அதைக் கடித்து உதறிக்கொன்று போட்டது. வலியோரது சேர்க்கையால், அற்ப பலமுள்ள சேவல் கொடிய பலமுள்ள நரிக்கு அஞ்சாமல், அதைக் கொன்றது.

---

15. "தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம் வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்"

மதுரைமா நகரிலே சங்கைப் பலகையிலே வீற்றிருந்து, தமிழாராய்ந்த புலவர் திலகரும், தெய்வபக்தி மிக்க வருமான நக்கீரர் இமயமலையிலுள்ள பதரிகாச்ரமத்துக்குச் சென்று கடவுள் தரிசனம் செய்யக் கருத்துக் கொண்டார். அவரெண்ணத்தை அறிந்த சங்கப் புலவரில் சிலர் தாமும் உடன் வருவதாக உரைத்தனர். நக்கீரர் நல்லதென்று அவர்களுடன் புறப்பட்டு, இமயமலையை அடைந்து, ஆங்குள்ள ஒரு காட்டினுள் நுழைந்தார். மற்றப் புலவர்களோ காட்டிற்கு வெளியிலேயே தங்கி, ஆங்குள்ள தேவாலயங்களைத் தொழுதுகொண் டிருக்க, காட்டினுள் நுழைந்த கீரர் ஒரு பெரிய தடாகத்தைக் கண்டு, நீராடி சுவாமி பூஜை செய்துகொண் டிருந்தார். அக்காலையில் அத் தடாகக் கரையில் வளர்ந்துள்ள தெய்வத்தன்மை பொருந்திய ஓர் ஆலமரத்திலிருந்து ஒரு பழுப்பு அவருக்கு முன்னே பாதி

நீரிலும் பாதி நிலத்திலும் விழுந்தது. விழவே, நீரில் விழுந்த பாதி மீனுகவும் நிலத்தில் விழுந்த பாதி பறவையாகவும் மாறி, ஒன்றை ஒன்று நீரிலும் நிலத்திலுமாக இழுக்க, நக்கீரர் நிஷ்டை கலைந்து, அவ்வாச்சரியத்தில் கருத்தைச் செலுத்தி விட்டார்.

இப்படியாகத் தெய்வ பூஜையில் மனம் திடப் படாதவரைச் சிறைப்படுத்தி ஓர் ஆயிரம் பேரான தும் புசிப்பதென்று விருதம் பூண்டு, அதுவரையில் தொளாயிரத்துத் தொண்ணூற் றென்பதின் மரை ஒரு மலைக்குகையில் அடைத்து வைத்திருந்த ஒரு கொடிய பூதம் இவரையும் பிடித்துக் கொண்டு போய், மற்றவரோடும் சேர்த்து அடைத்து ஆயிரம் பேராக்கி, நீராடிவந்து எல்லாரையும் புஜிக்கலா மென்று, ஸ்நானம் செய்ய வெளியே போயிற்று.

பூதத்தின் கருத்தையும் தாம் செய்த பிழையை யும் உணர்ந்த நக்கீரர், "ஐயோ! இத்தொளாயிரத் துத் தொண்ணூற் றென்பதின் மரும் நெடுங்கால மாகச் சிறைப்பட் டிருந்தும், இப்பூதத்தாலே நல்ல உணவும் பிறவும் கொடுக்கப் பெற்று, புஷ்டியாக வளர்ந்திருந்தார்களே! நாம் வந்து சேர்ந்தமையா லல்லவா இவர்களுக்கு மரணம் சம்பவிப்பதா யிருக் கிறது; எப்படியாவது இவர்களை விடுவிக்க வேண் டும்" என்று எண்ணி, முருகக் கடவுளை நோக் கித் 'திருமுரு காற்றுப் படை' என்னும் பிரபந்தத் தைச் செய்து தோத்திரம் செய்தார்.

உடனே முருகக் கடவுள் பிரசன்னராகி, "கீரரே! உமக்கு வேண்டும் வரமென்னை?" என் றனர். கீரர், "நாதா! என்னாலன்றோ இத் தொளா

யிரத்துத் தொண்ணூற்று ஒன்பதின்மரும் சாவ வேண்டி யிருக்கிறது; இவர்களை விடுவித்து, நான் ஒருவனுமே அப்பூதத்திற்கு இரையாகுமாறு வரம் தரல் வேண்டும்" என்று வேண்டினர்.

கேட்ட முருகக் கடவுள் கீரரது பெருங் குணத்தை மெச்சி, தமது வேலால் அக்குகையை யும் அப்பூதத்தையும் பிளந்து மாய்த்து, யாவரை யும் விடுவித்தனர். தமக்கு வந்த ஆபத்தைக் கருதாது தமது தோழர்களுக்கு நேர்ந்த விபத்தைக் கண்டிரங்கிய நக்கீரரது உத்தமகுணத்தைக் கேட்ட மற்றச் சங்கப் புலவர்கள் அப்புலவரைப் பெரிதும் கொண்டாடினார்கள்.

---

16. "தம்மையும் தங்க டலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர்"

சோழவள நாட்டின் பிரதான பட்டணமான உறையூரிலே தமிழறிவாள் என்ற ஒரு கணிகை மங்கை சிறந்து விளங்கினாள். சோழன் அவளை ஒரு நாள் கல்வியிற் பரீக்ஷிக்க, அவள் சங்கத்து வித்து வான்களினும் மேம்பட்டவளா யிருப்பதைக் கண்டு, வெகு மகிழ்ந்து, அவளை நோக்கி, "ஓ! தமிழறிவாய்! உனக்கென்ன வரம் வேண்டும்?" என்று கேட்டான். அவள், "அரசே! நான் எனது குலத்தொழிலைச் செய்ய விரும்பவில்லை; ஆதலால், என்னோடு கல்வி யில் வாதம் செய்து என்னை எவன் ஜயிப்பானோ அவனையே நான் கணவனாக மதிப்பேன்; என்னோடு

வாதுசெய்ய வருவார் எத்தகைய மன்னரா யிருந்தாலும், முதலில் ஆயிரம்பொன் அச்சாரமாகக் கொடுத்துவிட வேண்டும்; அவ்வாதத்தில் அவர் தோற்றால், நான் அவரது ஆயிரம் பொன்னையும் எடுத்துக் கொள்வதோடு அவரை அவமானமும் செய்து அனுப்பி விடுவேன்; இந்த ஒப்பந்தத்துக்கு உட்பட்டே என்னை ஒருவன் விரும்பி அணுகவேண்டும்; இந்தப்படி நான் செய்து, நிறைவேற்ற எனக்கு நீங்கள் தக்க உதவிகளைச் செய்ய வேண்டும்'' என்றாள்.

கேட்ட அரசன், "நீ சொல்லுவது மெத்தவும் சரி; கல்வி வாசனை அறியான் உன்னை அணுக நியாயமில்லை; நீ உன் இஷ்டப்படி செய்யலாம்'' என்றான். அன்று முதல் தமிழறிவாள் அரசன் சலிகையினால் கன்னி கழியாமலே, தனது அழகில் ஈடுபட்டுவரும் தனிகர்களை யெல்லாம் அவமானப் படுத்தி அனுப்பி விட்டு, ஆயிரம் பொன்னைப் பிடுங்கிக் கொண்டு, பெருத்த ஐச்வரிய முடையவளா யிருந்தாள்.

இப்படி யிருக்கையில், ஒரு விறகு தலையன் கட்டுச் சுமையோடு உறையூருக்கு வந்து கடைத் தெருவில் உட்கார்ந்திருக்க, அவ்வழியே பல்லக்கில் ஏறிவந்த இந்தத் தமிழறிவாளைக் கண்டு, அவன் ஆசைப்பட்டு, வெகுபேர்களின் உதவியால் ஆயிரம் பொன் சேகரித்துக் கொண்டு போய்க் கொடுத்து, 'இன்று என்னை உனக்கு நாயகனாக வைத்துக் கொள்'' என்றான்.

கேட்ட தமிழறிவாள் தனது வழக்கப்படி ஒரு கவி சொல்லிப் பொருள் கூறும்படி கேட்க, விறகு

தலையன் எழுத்துவாசனை யற்றவ னானதால், ஆடு திருடிய கள்ளன்போல விழிக்க, அவள் கோபித்துத் தனது தாதிகளைக் கொண்டு பிடர் பிடித்துத் தள்ளுவித்துப் பழமுறத்தால் அடிப்பித்து, வெருட்டினாள். அடிபட்ட விறகு தலையன் வெகு வியசனத்துடன் அவ்வூராரில் சிலரோடு தான் பட்டதைச் சொல்ல, அவர்கள், "நீ என்ன அதிசயம்? ஆயிரக்கணக்கான தனிகர்கள் அவளால் அவமான முற்றுப் போயிருக்கின்றனரே; அவளை ஜயித்து வசப்படுத்த வேண்டுமென்றால், கல்வியில் அவளினும் மேம்பட்டவனா யிருக்க வேண்டும்; அப்படிக்குக் கல்வியில் சிறந்தார் இங்கு ஒருவருமில்லை; ஒருவேளை மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவான்களுள் ஒருவ ரிருவ ரிருக்கலாம்; நீ போய், அவர்களைச் சரணமடை" என்றார்கள்.

கேட்ட விறகுதலையன் அதுவே உபாயமென்று, மதுரைக்குச் சென்று, நக்கீர தேவரது அடியில் விழுந்து நமஸ்காரம் செய்து, "என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்றான். அவர், "உனது குறையென்ன?" என்று கேட்க, விறகுதலையன் தான் தமிழறிவாளைக் கண்டது முதலாக நடந்த விஷயங்கள் யாவு முரைத்து, "எப்படியாவது எனக்கு அந்தக் கணிகைமங்கையுடன் சேர்க்கை யுண்டாகும்படி செய்யவேண்டும்" என்றான்.

நக்கீரதேவர் விறகுதலையனது மனவுறுதியைக் கண்டு, "இவனுக்கு அவசியம் உபகாரம் செய்ய வேண்டும்; நாம் செய்யவேண்டியது ஈனத்தொழிலாயிருந்தபோதிலும், சரணமென்றவரைக் கைவிடலாகாது" என்று எண்ணிக்கொண்டு, அவனுடன்

புறப்பட்டு, உறையூர் வந்து, தானும் ஒருவிறகு தலையன்போலச் சுமைதாங்கி, தமிழறிவாள் மாளிகைக்குச்சென்று, வாதத்தில், அவளைத்தோல்வியுறச் செய்து, அவ்விறகு தலையனுக்கு அவளைக் கல்யாணம் செய்வித்தார்.

தமது மேன்மையைக் கருதாது இழிகுலத்தானை விறகுதலையனுக்கு தௌத்யம் செய்து அவன் துன்பத்தைத் தீர்த்த நக்கீரதேவரது இவ்விருத்தாந்தத்தைக் கேட்டு, சங்கப் புலவர் அனைவரும் அவரைக் கொண்டாடினார்கள்.

---

17. "எழுத்தறியார் கல்விப் பெருக்கமனைத்தும் எழுத்தறிவார் காணின் இலையாம்"

ஒருநாள் கம்பரும் சோழனும் ஓர் உய்யானவனத்திலே உல்லாஸமாக உலாவிக்கொண்டிருக்கையிலே, கம்பர் சொன்ன ஒரு வசனத்தால் அரசன் கோபித்து, அப்புலவர் திலகரை அவமானப் படுத்தக்கருதி, தனது தாசியான பொன்னியைக் கொண்டு, ஒரு சூழ்ச்சியால் 'தாசி பொன்னிக்குக் கம்பர் அடிமை' என்று எழுதுவித்துப்பெற்றுக் கொண்டு, பல வித்வான்கள் நிறைந்த தனது ஸபைக்கு வந்து, அச்சீட்டை அவர்கள் முன்னிலையில் வைத்து, "இதற்குப் பொருள் கூறுக" என்றனன். பார்த்த புலவர் அனைவரும், "இது என்ன அநியாயம்! கவிச்சக்ரவர்த்தியான கம்பர் கணிகைமாதான பொன்னிக்கு அடிமையா? தோலோ தோல்! இது இழிவு இழிவு எந்த ஞான்றும்!" என்று பலவாறு பிரசங்கிக்கத் தொடங்கினர்.

இப்படி இவர்கள் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது, வழக்கம்போலவே உல்லாஸமாய் அரசன் ஸபைக்கு வந்த கம்பர், அப்புலவர்களது ஆரவாரத்தைக் கேட்டு, "என்ன விஷயம்?" என்றார். உடனே அரசன் கம்பர்கையில் அவர் எழுதிக் கொடுத்த சீட்டைக்கொடுத்து, "இதனடியில் கையெழுத்து வைத்திருப்பது யார்?" என்றான். கம்பர் நடந்த சூதை அறிந்து, தைரியமாக, "நாம் தாம் கையெழுத்து வைத்தோம்" என்றார். பிறகு அரசன் அச்சீட்டைத் திருமுகம்படிப்போன் கையில் கொடுத்துப் படிக்கச் சொல்ல, அவன் எல்லாரும் கேட்கும் வண்ணம் அதைப் படித்த பின்பு, அரசன் கம்பரைநோக்கி, "புலவரே! நீர் தாசி பொன்னிக்கு அடிமைதானா?" என்றான். அவர், "ஆம்; அதில் என்ன தடை?" என்றார். சோழன், குலுங்க நகைத்து, "வித்துவ சிரோமணியான உமக்குத் தாசி பொன்னிக்கு அடிமை செய்வதில் இழிவு புலப்படவில்லையோ?" என்றான். கம்பர், "ஹா! தாசி பொன்னிக்கு அடிமை செய்வதில் அகௌரவம் நினைப்பாரை இன்றுதான் கண்டேன்; முப்பத்து முக்கோடித் தேவரும்; பிரம ருத்திராதிகளும் அத்தாசி பொன்னிக்கு அடிமை செய்யப் பெற்றிலமே என்று வருந்துகின்றனரே; எனக்கு அத்தகைய பாக்யம் கிடைத்து விட்டால், என்னினுயர்ந்தார் யாவர் கொலோ? என்றனர்.

கேட்ட சோழன், "கவியரசே! நீர் பேசும் பேச்சுக்கு உமக்கே பொருள் தெரியவில்லைபோலிருக்கிறது; இந்தச் சீட்டில் எழுதியிருப்பதற்குப் பொருள் என்ன? கூறும்" என்றான். உடனே கம்

பர், "'தாசி பொன்னிக்குக் கம்பர் அடிமை' என்றது ஆறு பதங்களால் முடிந்த ஒருவாக்கியம். இதில் முதற்பதம் 'தா', அதன் ஈறு யகரம் தொகுத்தல் விகாரம் இரண்டாம் பதம் 'சி' இது குறுக்கல் விகாரம்; மூன்ருவது பொன்னி; இது இகர விகுதி பெற்றது. நான்காவது 'கு'; ஐந்தாவது 'கம்பர்' ஆருவது 'அடிமை'. இது சொற்பிரிப்பு. பதவுரை:

தாய் — அன்னை,
சீ — மங்களம்,
பொன்னி — லக்ஷ்மி,
கு — நான்காம் வேற்றுமை உருபிடைச் [சொல்;
கம்பர் — எனது பெயர்,
அடிமை — பயனிலை.

இதன் திரண்ட அர்த்தம் — 'உலக மாதாவாகிய ஸ்ரீலக்ஷ்மிக்குக் கம்பர் அடிமை' என்பது. இங்ஙனம் லோகமாதர்வாகிய லக்ஷ்மிக்கு நாம் அடிமையானல், அதில் இழிவு உண்டோ?" என்ருர்.

கேட்ட அரசனும் இலக்கணநூல் அறியாத மற்றப் புலவரும் வாயடங்கி, ஒன்றும் சொல்ல மாட்டாது வெட்கித் தலைகுனிந்து போயினர்.

---

18. "ஆக்கு மறிவான் அலது பிறப்பினல் மீக்கோ ளுயரிழிவு வேண்டற்க"

சோழனது தூண்டுதலால் ராமாயணத்தைத் தமிழில் பாடிய கம்பர் அதை ஸ்ரீவைணவர் கூட்டத்தில் பிரசங்கித்து, அவர்களால் உச்சிமேற் கொள்ளப்படும் காவ்யமாக அதை ஆக்க வேண்டு

மென்று திருவரங்கத்துக்குச் சென்று, ஆங்குள்ள வைணவர்களிடத்துத் தாம் செய்த அப் பிரபந்தத்தைக் காட்டினர். அக் காவியம் ஒப்புமீர்வற்றதாய் எல்லாரும் களித்து மகிழும்படி சிறந்து விளங்கிய கற்பனைகளோடு கூடியிருந்தாலும், நூலாசிரியன் சூத்திரனாகிய உவச்சனாயினனே என்று, அவ் வைணவர்கள் உபேக்ஷையா யிருந்து விட்டார்கள்.

அதன்மேல் கம்பர், அவ்வைணவரது மதாசாரியராய் விளங்கிய நாதமுனிகளிடத்துச் சென்று, தாம்பாடிய பிரபந்தத்தைப் படித்துக் காட்ட, அக்கருணை வள்ளல் வெகு ஸந்தோஷம் அடைந்து, தமிழ் நாடு உய்யவேண்டு மென்னும் தயையால், ஆயிரக்கணக்கான வைணவர்களைத் திருவரங்கன் கோயிலிலே மோட்டு அழகிய சிங்கன் ஸந்நிதியிலே கூட்டு வித்து, "ஹே! வைணவர்காள்! இத்திவ்வியப் பிரபந்தம் ஸ்ரீராமனைப் பற்றிய கதையாதலால், நாமெல்லாரும் அவசியம் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்; ஆயினும் இந்நூலின் ஆசிரியன் சூத்திரனாயினனே என்று இக்காவியத்தை நீங்கள் உபேக்ஷை செய்வது உசிதமன்று. இந்த அழகிய சிங்கரது ஸந்நிதியில் இக்காவியத்தை இக்கம்பன் பிரசங்கிக்கட்டும்; பகவான் 'இதை நாம் உகந்தோம்' என்றதற்கு அறிகுறியாக யாதேனும் ஓர் உற்பாதத்தை உண்டாக்குவாரானால், நாம் இதை அங்கீகரிப்போம்" என்றனர்.

கேட்டவைணவர் அனைவரும், "நன்று! நன்று!" என்று ஒப்புக்கொண்டனர். கம்பர் ஒவ்வொரு படலமாகப் பிரஸங்கம் செய்து வந்

தார். அப்பொழுது பலப்பலரும் பல பல ஆக்ஷேபங்கள் செய்துவரவே கம்பர் அவற்றுக்கெல்லாம் தக்க விடை யளித்து நாதமுனிகள் அகங்களித்துக் கூத்தாடும்படி கவிப்பிரஸங்கம் செய்தான். இப்படிச் செய்து வருகையில், இரணியன் வதைப்படலத்தைக் கம்பர் பிரஸங்கம் செய்யும்போது, மோட்டழகிய சிங்கக் கடவுளே, சிரக்கம்பம் செய்து, கைகொட்டி ஆர்த்தனர். அதைப் பார்த்து அதிசயித்த ஸ்ரீவைணவர்கள் எல்லாரும் எழுந்து, கம்ப நாட்டாழ்வாரை நமஸ்காரம் செய்து, "கவிச் சக்ரவர்த்தியாரே! முதலில் உம்மை அலக்ஷியம் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்; மனிதர்களில் அறிவால் உயர்ந்த மனிதனே உயர்ந்தவனன்றி, குலத்தால் உயர்ந்தவன் உயர்ந்தவனாகான் என்பதை மறந்து போனோம்; அது எங்களுக் கிருந்த குலமதமேயாகும்; நீர் கிருபை செய்து எங்களை க்ஷமித்தருளவேண்டும்" என்று கெஞ்சினார்கள்.

கம்பர் அவர்களுக் கெல்லாம் இனிய மொழி கூறி, மகிழ்விக்க, ஸ்ரீமந் நாதமுனிகள் கம்பருக்குக் கவிச்சக்ரவர்த்தி என்ற பட்டங்கொடுத்து, அவர் பாடலில் இரண்டு கவிகளைத் திருவரங்கன் ஸந்நிதியில் அநுசந்திக்கும்படி கட்டளை யிட்டார்.

கம்பர் ஜாதியில் உவச்சராயினும் அவரது அறிவைக் கருதி, உயர்குலத்துப் பெரியோ ரனைவரும் அவரைக் கொண்டாடத் தலைப்பட்டனர்.

---

19. "கல்லா அறிவிற் கயவர்பால் கற்றுணர்ந்த நல்லார் தமதுகனம் நண்ணுரே"

காந்தார நாட்டில் அரசு செய்து வந்த வீரன் என்ற ஒரு மூடராஜன், தனது அரண்மனைக் கெதிரில் ஒரு பெரிய குளம் வெட்டி, அதற்கு அழகிய படித்துறைகளும் மண்டபங்களும் செய்து அமைக்க, அதில் நீர் எவ்வளவு ஆழம் வெட்டியும் சுரவாமையினுல், அவன் மிகவும் மனம் வருந்திப் பல தான தருமங்கள் செய்ய ஆரம்பித்தான். எவ்வளவுதான் அவன் செய்தும், அக் குளத்தில் நீர் ஊருமையினுல், அவன் என்ன செய்யலாம் என்று கவலையுற்றவனுய், அக் குளக்கரையில் உட்கார்ந்திருக்க, மிக்க ஞானியும் எல்லா நீதி நூலும் கற்றுணர்ந்த வருமான ஒரு ஸந்நியாஸி ஆங்குப் போகக் கண்டு, எழுந்து போய் அவரை வணங்கி, "ஓ! யதிபுங்கவா! நான் ஏராளமான பணச்செலவு செய்து, இக் குளத்தை வெகு ஆழமாய் வெட்டினேன்; இதில் சிறிதேனும் நீர் ஊறுகிறதில்லை; நான் பல தான தருமங்களும் செய்து வருகிறேன்: அப்படியும் இதில் நீர் சுரப்பதைக் காணேன்; இது வற்றுமல் நீர் நிரம்பி இருக்க என்ன உபாயம் செய்யலாம்? சொல்லும்" என்றுன்.

அவர் சிறிது ஆலோசித்து, "வேந்தே! இக் குளத் தடியில் ஒரு பூதம் இருக்கிறது; அதற்கு ரத்த பலி கொடுக்க வேண்டும்; சுத்த வீரனும் ஸகல ராஜ லக்ஷணங்களும் நிறைந்தவனுமான ஒரு ராஜனையாவது, அல்லது ஸகல கலைகளையும் அறிந்த வரும், மிக்க ஞானியுமா யிருக்கின்ற ஒரு ஸந்யாஸியை யாவது கொன்று, ரத்தத்தைக்

குளத்து நடுவில் ஊற்றினால், இக்குளத்தில் என்றைக்கும் வற்றாத நீர் சுரக்கும்" என்றார்.

உடனே அரசன் தன் மனத்திற்குள், "சுத்த வீரனும் ஸகல ராஜ லக்ஷணங்களும் நிரம்பியவனுமான அரசன் நமக்கு எங்கே அகப்படுவான்? ஒருநாளுமில்லை; இந்த ஸந்யாஸிதாம் ஞானியாயும் ஸகல கலைகளையும் அறிந்தவராயு மிருக்கிறார்; இவரைப் பலியிடுவதே காரியம்" என்று முடிவு செய்து, உடைவாளால், அவ்யதியின் தலையை அறுத்து ரத்தத்தைக் குளத்தில் ஊற்றி, அதை வற்றாத நீருள்ளதாகச் செய்தான்.

படிப்பிலாதும் அறிவிலியும் கயவனுமான ராஜனிடத்துக் கற்றுணர்ந்தவரான அந்த ஸந்யாஸி கனம்பெறாது, உயிர் துறந்தார்.

---

20. "முனிவினும் நல்குவர் மூதறிஞர்"

கொடையாளிகளுள் சிறந்தவரான திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியார் தமது குமாரரது பதினாறும் ஆண்டு பிறந்ததினத்தன்று பலவகைப்பட்ட தருமங்கள் செய்ததோடு, நல்ல வெயிலெரிக்கும் வேளையிலே வழிப்போக்கருக்குப் பானகம் கொடுக்கும் தருமத்தையும் செய்தார். அத்தருமம் நடந்து வருங்காலையில், சடையரது குமாரர் சமீபத்திலேயே உட்கார்ந்துகொண்டு, பாட்டை சாரிகள் பானகம் வாங்கிக் குடித்துத் திருப்தியடைந்து போவதைப் பார்த்துக் களிப்

படைந்து, "இது சிறந்த தருமமல்லவா?" என்று எண்ணிக் கொண்டிருந்தார்.

இப்படி இருக்கையில், ஒரு வழிப்போக்கன் எல்லாருக்கும் முன்னுலே தான் பானகம் குடிக்க வேண்டும் என்னும் ஆசையால் தனக்கு முன்னே குடித்துக் கொண்டிருப்பாரை யெல்லாம் தள்ளிக் கொண்டு முன்னே வந்தான். வரவே, கூட்டம் அவனைப் பலமாய் நெட்டித்தள்ள, அவன் பானகப் பானைகளின் மேல் விழுந்து, அவற்றில் இரண்டை உடைத்து விட்டான்.

விடவே, பானகம் ஆறு உடைப்பெடுத்துக் கொண்டாற்போல ஓட, கண்ட சடையன் குமாரர் அந்தப் பாட்டை சாரியின்மேல் கடுங் கோபங் கொண்டு, அவனைப் பிடித்து, வேறொன்றுஞ் செய்யாமல், அவன் வாயில் பானகத்தையே அளவுக்கதிகமாய்ப் புகட்டினுர். அவன் "ஐயோ! போதுமே! ஐயோ போதுமே!" என்று அலறி, குடித்த பானகத்தை யெல்லாம் கக்கிக்கொண்டு, "இனிமேல் இப்படி விஷமம் பண்ணுவதில்லை, விட்டுவிடுங்கள் விட்டுவிடுங்கள்!" என்று கதறினுன்.

பக்கத்திலிருந்த ஜனங்களனைவரும் அவனைப் பார்த்து நகைத்துக் கேலி செய்த பிறகு, இப்படிப் பெருங்குற்றம் செய்து நஷ்டமுண்டாக்கிய அந்த துஷ்டனை வேறுவிதமாகக் கண்டிக்காமல் தமது கொடையாலேயே கண்டித்தாரே! கோபமுற்ற காலத்தும் பெரியோர் தமது கொடைத்தொழிலை மறவாரோ? என்று அவரைக் கொண்டாடினுர்கள்.

21. "உள்ளக் கனிவினும் நல்கார் கயவர்"

ஒரு கிழக் கொக்கு பலவீனத்தால் ஆகாரம் ஸம்பாதிக்கக் கூடாமல், யதிருச்சையாகக் கிடைக்கும் சிறிது ஆகாரத்தை உண்டு மகிழ்ந்திருக்கையில், ஓர் ஓனாய் ஒருநாள் அதனிடத்திற்கு வந்து, "ஓ! கொக்காரே! நான் ஓர் ஆட்டுக்குட்டியை



அவசர அவசரமாய்த் தின்னும் போது, அதன் எலும்பொன்று என் தொண்டையில் மாட்டிக் கொண்டு விட்டது. அதனால், எனக்கு மூச்சுத் திணறுகிறது; நீர் உமது மூக்கால் அவ்வெலும்பை எடுத்துவிட்டீரானால், எந்நாளும் நீர் இரைக்குத் துன்புறுவண்ணம் இரை அளிப்பேன்" என்றது.

கேட்ட கொக்கு, தனது வயிற்றுக் கொடுமையால், அபாயம் வருமே என்று சிறிதும் எண்ணமல், தனது நீண்ட கழுத்தை அவ்வோனையின் தொண்டையி லிட்டு, மெல்ல அவ் வெலும்பை வெளியி லெடுத்துப் போட்டது. அதனல் துன்பம் நீங்கிய ஓனய், வெகு ஸந்தோஷமாய், "ஹா, ஹா! இப்பொழுதுதான் எனக்கு ஸுகமா யிருக்கிறது; இனி விசாரமில்லை" என்று சொல்லிக் கூத்தாடிற்று.

அப்போது கொக்கு, "ஓனயாரே! காத்திருக்கிறேனே! நீர் கொடுப்பதாகச் சொன்ன வெகுமதி எங்கே? நான் வேறோர் இடம் போகவேண்டும்" என்றது. உடனே ஓனய் வெகுண்டு, "ஆ! அற்பக் கொக்கே! என்னிடத்தும் நீ வெகுமதி பெறவேண்டியா? என் வாயில் உன் கழுத்து அகப்பட்டிருந்தபோது, நான் வெடுக்கெனக் கடித்து, உன்னை யமபுரிக்கு அனுப்பா திருந்தேனே; அந்த நன்றியை மறந்தனையோ? நன்றி கெட்ட உன்னை நான் கண்ணெடுத்துப் பாரேன்; பொட்டெனப் புறப்பட்டுப் போ" என்றது.

கேட்ட கொக்கு, "ஐயோ! துர்ஜனங்கள் உள்ளம் களித்திருந்த ஸமயத்திலும், பிறர்க்கு ஈயார் என்பதை மறந்தேனே!" என்று சொல்லிக்கொண்டு, விலகிப் போயிற்று.

---

22. "எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குரியர்"

ஒரூரில் வஸித்த மூக்கறைய னொருவனைப் பலரும் பரிகஸிக்க, அவன் ஒருநாள் ஓர் உபாயம் பண்ணினன். பல ஜனங்களும் கூடும் கடைத்

031,3X N15

222807

தெருவின் மத்தியில் நின்றுகொண்டு அவ்வா ஆகாசத்தைப் பார்த்து, "ஹா! ஹா! என்ன சிறப்பு! என்ன மகிமை! ஜனார்த்தனா! உன் திருமேனிக் காட்சியே காட்சி; மற்றைய காட்சி யெல்லாம் காட்சியாமோ?" என்று பலகாலும் சொல்லி, விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்தான். அதைக் கேட்ட ஜனங்களெல்லாம், "இஃதென்ன விந்தை?" என்று ஆகாசத்தைப் பார்க்க, அவர்களுக்கு ஒன்றும் ஆங்குத் தென்படாமையால், மூக்கறையனிடம் வந்து, "என்ன ஐயா! நீ காண்கிறாய்? எங்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே!" என்றனர்.



அந்த மூக்கறையன், "உங்களுக் கெல்லாம் தெரியுமோ? மூக்கே முக்திக்கு இடையூறாய் நிற்பது. அறிவினராக வேண்டு மென்றால், மூக்கை யறுத்துக் கொள்ள வேண்டு மென்று பெரியோர் சொல்லி யிருக்க வில்லையா? இதற்குப் பிரத்தி

யக்ஷப் பிரமாணமாக ஸ்திரீகளைப் பாருங்கள். அவர்கள் புருஷர்களை விடப் புத்திசாலிகள் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளாதிரார். அவர்களது புத்தி நுட்பத்துக்கு யாது காரணமென்பீர்? அவர்கள் மூக்கில் பல துவாரமிட்டுக் கொண்டிருப்பது தான்; சரஸ்வதிக்கு மூக்கே இல்லை யென்பது புராணப் பிரசித்தம்; எனக்கு தினம் தினம் கடவுள் தரிசனம் கிடைப்பது, பிரமன் என்னை மூக்கறையனுக்கி யிருக்கும் பாக்கியந்தானே. ஆஹா! ஆஹா! அதோ பாரீர்! இடபவாகன ரூடராய் பரமசிவனும், கருடவாகன ரூடராய்ப் பெருமாளும் காட்சி தருகின்றார்!" என்று சொல்லி, விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்தான்.

இப்படி இவன் பிறரை ஏமாற்றுவதற்காகப் பொய்யாகவும் வஞ்சனையாகவும் சொன்ன மொழியால் சிவபக்தன் ஒருவனும் விஷ்ணுபக்தன் ஒருவனும் மயங்கிப்போய், கத்தியினால் தம் மூக்கினை அறுத்துக் கொண்டு, ஆகாசத்தைப் பார்த்தார்கள். எவ்வளவுதான் உற்றுப்பார்த்தும் ஏதொன்றும் காணப்படாமையால், "ஐயோ மோசம் போனேமே!" என்று மனதுக்குள் வருந்தி, ஆயினும் பிறர் பரிகசிப்பார்களே என்று அஞ்சி, "ஹா!, ஹா! என்ன மகிமை! என்ன மகிமை! கடவுளே! கடவுளே! பல்லாண்டு, பல்லாண்டு!" என்று சொல்லி, கடவுளைக் கண்டவர் போலக் குதித்தார்கள்.

இவ் விருவர்களையும் கண்ட மற்றும் சில ஜனங்கள், "கடவுளிடத்து மாறாத பக்தியுடைய இவர்கள் கூறுவதும்பொய்யா யிருக்குமா?" என்று நினைத்து, தாமும் மூக்கை அறுத்துக்கொண்டு, ஆகாசத்தைப்

பார்த்தார்கள். அவர்களும், "நாம் வஞ்சிக்கப் பெற்றோம்" என்பதை அறிந்ததும், கடவுளைக் கண்டதாகவே குதித்தார்கள். இப்படிப் பலபேரும் குதிக்க, அவ்வூரிலுள்ளார் யாவரும் மூக்கறுத்துக் கொண்டு, மூக்கறை யானார்கள்.

அதன் பிறகு முதல் மூக்கறையன், "என்னை நீங்கள் தினமும் பழித்தமையால இந்த உபாயம் பண்ணினேன்; நான் என்னைப் புகழ்ந்து பேசாத வரையில், நீங்கள் என்னைப் பழிப்பதைத் தவிர்த்திருக்க மாட்டீர்கள்" என்றான்.

"'இழிஞர் பிறர் பழிக்கு அஞ்சித் தற்புகழ்வர்' என்பதை மறந்தோமே" என்று மூக்கறுத்துக் கொண்ட ஜனங்கள் யாவரும் துக்கித்திருந்தார்கள்.

---

23. "கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்"

மதுரையம்பதிக்கு இறைவனாகிய பாண்டியன் ஒருநாள் தன் ஸபையிலுள்ள புலவரை நோக்கி, "வித்துவான்களே! நாரையின் மூக்கிற்குச் சரியான உவமை யாது?" என்று வினவ, அவர்கள் முருக்கமொட்டு முதலிய பல உவமைகளைக் கூறினர். கேட்ட அரசன் அவ் வுவமைகள் அம் மூக்கிற்கு முற்றிலும் பொருத்தமில்லை யென்று கண்டு, "ஆ! ஆ! நம்மிடத்துத் தக்க வித்துவான் ஒருவனுமில்லையே" என்று வியசனமா யிருந்தான்.

இப்படி இருக்கையில், மாரிக் காலத்தில் ஒரு நாளிரவில் அவன் நகர் சோதனைக்காகப் புறப்பட்டு, வெளியே உலாவிக் கொண்டு, ஒரு ராஜ

மண்டபத்தண்டை வருகையில், காதுக்கு மிக்க இனிமையான பாடல் ஒன்றைக் கேட்டு, "இஃதென்னே? முழுவதும் கேட்போம்" என்று, ஆங்கோரிடத்தில் மறைந்து நின்றான். அப்போது ஓர் ஏழைப் பரதேசி ஆகாயத்திற் பறந்து போகும் ஒரு நாரையைப் பார்த்து, "ஓ! நாராய், நாராய்! செங்கால் நாராய்! பவள நிறத்தையும் பனையின் கிழங்கு பிளந்தாற் போலும் கூரிய மூக்கையும் உடைய செங்கால் நாராய்! நீயும் உன் மனைவியும் வட திசைக்குப் போவீரானால், எம்மூர் சத்தி முத்தியிலுள்ள குளத்தில் தங்கி, என் மனைவியைக் கண்டு, இம் மதுரையிலே ஆடையில்லாமல் வாடைக் காற்றால் துன்புற்று, கையால் சரீரத்தை அணைத்து. ஒருகால் மேல் மறுகாலைப் போட்டுக் குண்டுருட்டாய் முடங்கி, ஒருக்கணித்துப் படுத்துக்கொண்டு, பெட்டியிலடங்கிய பாம்புபோலப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் என்னை, 'கண்டோம்' என்று சொல்லும். அவள் என்னையே நினைத்து, மழை ஒழுகி மண் கரைந்த என் வீட்டுச் சுவரில் பல்லி கொட்டுந்தோறும் என் வருகையைக் குறித்துச் சகுனம் பார்த்துக்கொண்டு இருப்பள்; நீலகுவில் அவளை அடையாளம் காணலாம்" என்னும் கருத்தடங்கிய ஒரு பாடலைச் சொன்னான்.

கேட்ட பாண்டியன் அப் புலவனது கல்வியின் பெருமையையும், செல்வத்தின் சிறுமையையும் கண்டு வருந்தி, பிற்பாடு, "ஆ! ஆ! நாரை மூக்கிற்குப் பிளந்த பனங்கிழங்கன்றோ தக்க உவமம்; அதை இப் புலவன் அறிந்து சொன்னானே" என்று களித்து, அப் புலவனைத் தனது அரண்மனைக்கு

அழைத்துப் போய்த் தன்னோடு ஸமானமான ஆஸனத்தில் உட்காருவித்துப் பலவிதமான உபசாரங்கள் செய்து, அப் புலவன் அறியாமலே சத்திமுத்தியூரிலே அவனுக்குச் சிறந்த மாளிகையும் அதற்கு ஏற்ற ஸகல ஐச்வரியங்களும் அமைத்து, பிறகு பெரும் பரிசோடும் அவனை ஊருக்கு அனுப்பினான்.

தனது ஊரை அடைந்ததும் அப் புலவன் தனது ஓட்டைக் கூரைவீடு ஒங்கு பெரு மாளிகையாகவும், தனது மனைவியின் கந்தைத் துணி காசிப் பீதாம்பரமாகவும், இப்படியே மண் பாத்திரம் பண்டம் முதலிய யாவும் பொன்னாகவும் ரத்தினமாகவும் மாறி இருக்கக் கண்டு, அளவு கடந்த ஆனந்தங் கொண்டு, பாண்டியனது ஸபைக்குப் பல்லக்கிலேறிவர, அரசன் அவனைத் தனக்கு ஆஸ்தான வித்துவானாய் வைத்துக்கொண்டு, ஸகோதரனிடத்துப் போல அன்பு பாராட்டி வந்தான்.

மற்றப் புலவர் அனைவரும், "எப்படியும் நன்றாய்க் கற்ற அறிவுடையவரைத் தாம் பெரியோர் மதிப்பர்; நாமும் கசடறக் கற்க முயலவேண்டும்" என்று நினைத்து கற்கத் தொடங்கினர்.

---

24. "பெரியார்முன் தன்னைப் புனைந்துரைத்த பேதை தரியா துயர்வகன்று தாழும்"

ஒரு வேந்தன் ஒருநாள் சமுத்திரக்கரையில் நின்று கொண்டிருக்கும்போது, கடலில் பாய் விரித்தோடிய ஒரு கப்பல் புயலில் அகப்பட்டுக்கவிழ, அதிலிருந்த ஜனங்கள் யாவரும் முழுகிப்போனார்கள். அதை அவன் பார்த்தவுடன்,

"ஆ! ஆ! கடவுளே! உன்னை எல்லாரும் தருமரூபி என்கிறார்களே! எவனோ ஒருவன் பாபம் செய்யப் போக, அவன் நிமித்தமாக இத்தனை ஜனங்களையும் கவிழ்த்து முழுக்கினையே! இது தர்மமா?" என்றான்.

அப்பொழுது தேவேந்திரன் ஒரு ரிஷிபோல அவன் முன்னே நின்று, "அரசே! என்ன சொல்லுகிறீர்?" என்றான். உடனே வேந்தன், "முனிவரே! என்ன அக்கிரமம்! என்ன அக்கிரமம்! கடவுளுக்கு நீதியே தெரியவில்லை; ஒரு பாபிக்காக இத்தனை ஜனங்களையும் கடவுள் கவிழ்த்து விட்டாரே! நானாயிருந்தால் அப்படிச் செய்வேனா? எத்தனையோ பெயர் என் நாட்டில் பிழைசெய்திருக்கிறார்கள்; அவர்களுக்கெல்லாம் நியாயமான தண்டனையே நான் விதித்திருக்கிறேன்; இப்படி ஒரு குற்றவாளிக்காகப் பலரைத் தண்டித்ததே இல்லை" என்றான்.

இப்படி இவன் சொல்லி வாய் மூடுமுன் இவன் நின்றுகொண்டிருந்த விடத்தில் ஓர் எறும்புப் புற்றுண்டாகி, கோடிக்கணக்கான எறும்புகள் அவன் காலடியைச் சுற்றிமொய்க்க, ஓர் எறும்பு அவன் காலில் ஏறி, வெடுக்கெனத் தொடையில் கடித்து விட்டது. அவன் திடுக்கிட்டு, நோவு பொறாது, அவ்வெறும்பனைத்தையும் காலால் தேய்த்துக் கொன்றான். உடனே ரிஷி இந்திர ரூபம் எடுத்துக் கொண்டு, "ஓ! வேந்தே! இதுதானோ நீ செய்கிற நீதி! ஓர் எறும்பு உன்னைக் கடித்ததென்று ஒரு கோடி எறும்பை நீ வதைத்தையே! நன்று நன்று! இத்தகைய நீ கடவுளது முறையின்மையை எப்படிப் பழிக்கப் புகுந்தனை?" என்றான்.

கேட்ட வேந்தன் நாணிப்போய், இந்திரன் காலில் விழுந்து, மன்னிக்கும்படி வேண்ட, இந்திரன், "நீ நூறுவருஷம் எறும்பாயிருந்து, செத்த இந்த ஒருகோடி எறும்பையும் நீ பிறப்பித்த பிறகு வேந்தனாகக் கடவாய்" என்று சாபமும், அதற்குப் பிரதியனுக்கிரகமும் செய்து மறைந்தான்.

கடவுளினும் தான் அதிகமென்று இந்திரன் முன் தன்னைப் புகழ்ந்துரைத்த பேதையான அரசன் அற்பமான எறும்பானான்.

---

25. "கற்றறியார் செய்யும் கருநட்பும் தாம்கூடி உற்றுழியும் தீமைநிகழ் வுள்ளதே"

ஒன்றுக்கொன்று மிகவும் நட்பாயிருந்த ஒரு வண்ணானது கழுதையும் ஓர் உழவனது எருமைக்கடாவும் ஒருநாள், "இந்த இரக்கம் அற்ற யஜமானனிடத்தில் இருந்து வாழ்வதினும் எங்கேயாவது ஓடிப்போவது நலம்; நம்மிருவருக்கும் குரல் இனிமையா யிருக்குமாதலால், காட்டில் நாம் போய்ப் பாடினால், ஸகல மிருகங்களும் வந்து கேட்டு ஆனந்தித்து, நமக்குப் பரிசு அளித்துப் போகும்; நாம் ஸுகமாகக் காலம் கழிக்கலாம்; நாம் இப்படி இரவும் பகலுமாய் இக்கொடியருக்கு உழைத்து, நொந்துபோக வேண்டாம்" என்று பேசிக்கொண்டன. இதைப் பக்கத்து வீட்டிலிருந்த ஒரு வியாபாரியின் ஒட்டகம் கேட்டு, "என் நண்பர்களே! நீங்கள் சொல்வது மிகவும் நல்ல ஆலோசனை; நானும் இங்குக் கஷ்டப்படுவதால், உங்களுடன் சேர்ந்து வந்துவிட விரும்பு

கிறேன்; நீங்கள் பாடும்போது, நான் நர்த்தனம் செய்வேன்; எனக்கு அந்த வித்தையில் மிகத் தேர்ச்சி உண்டென்று நீங்கள் அறிவீரே'' என்றது.

இந்த ஒட்டகத்தினது வார்த்தையால் கழுதையும் கடாவும் மிகக் களித்து, மனத்துணிவுகொண்டு, அன்று இரவே புறப்பட்டு, ஒட்டையுடன் காட்டிற் போய் ஒளிந்து கொண்டன. வண்ணான், உழவன், வர்த்தகன் என்ற மூவரும் தத்தமது மிருகங்களைத் தேடித்தேடி யலைந்து பார்த்தும், அகப்படாமையால், சும்மா இருந்து விட்டார்கள். காட்டில் புகுந்த அம்மூன்றும் தாங்கள் செய்து கொண்ட ஸங்கேதப்படி ஒருநாளிரவு பாடி ஆட, அப்பொழுது அங்குக்கூடிய பல மிருகங்களும் அவற்றை நோக்கிப் பரிகாசம் செய்தன. அப்பொழுது ஆங்கு வந்த ஒரு நரி, "நண்பர்களே! இவ வித்துவான்கள் மூவரும் வெகு ஸமர்த்தரா யிருப்பதால், இவர்களது ஸங்கீதத்தை நமது மிருகேந்திரனே கேட்க வேண்டும்; நாளை நாம் அவரை அழைத்து வந்து அக்ராஸனாதிபதியாக வைத்து, அவர் முன்பு இவரைப் பாடச் சொல்லுவமா?'' என்றது.

மிருகராஜன் என்ற பேர் கேட்டதும் எல்லா மிருகங்களும் நடுநடுங்கிப் போய், வாய் பேசமாட்டாமல் நிற்க, கழுதை, கடா, ஒட்டை என்ற அம்மூன்று மட்டும் வெகு ஸந்தோஷங் கொண்டு, "அப்படியே ஆகட்டும்; நாளை நாங்கள் ராஜன் முன் பாடுகிறோம்'' என்றன. நரி, "ஸரி, நமக்கு நல்ல இரை அகப்பட்டது?'' என்று நினைத்து அகம் மகிழ்ந்து, தந்திரமாக அவற்றை அழைத்துக் கொண்டு போய்ச் சிங்கத்தின் முன் விட்டது.

உடனே சிங்கம் அம் மூன்றின் மேலும் பாய்ந்து கொன்று, நரிக்குள்ள மாமிசபாகம் கொடுத்து, வயிறு நிறையத் தின்றது.

அறிவிலிகளாகிய அம் மிருகங்களுடைய இத்தகைய கூட்டுறவு இப்படியாகப் பிராணஹானியாய் முடிந்தது.

---

26. "கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை"

சோழனோடு மனஸ்தாபப்பட்டு உடுத்த துணியுடன் அவன் நாட்டைவிட்டு வெளிப்பட்ட கம்பர் ஒரு பட்டணத்து வழியாகப் போகும்போது, பசியால் மிக்க வருந்தி, அவ்வூர் ராணியான 'வேலி' என்பாளிடம்சென்று, "எனக்கேதேனும் வேலை தா; நான் செய்து, கூலிபெற்றுக் கொள்ளுகிறேன்; மிகப் பசியா யிருக்கிறது" என்றார். அவள் ஓரிடத்தைக் குறித்துக்காட்டி, "இங்கு நீ ஆறடி உயரத்துக்கு ஒரு சுவர் வைத்தால், குறுணிநெல் கூலிதருவேன்" என்றாள். கம்பர் ஸரி என்று ஸம்மதித்து, மண் வெட்டி கூடை வாங்கிக்கொண்டு போய், மண் குழைத்துச் சுவர் வைத்து விட்டு, கூலிக்கு அவளிடம் வந்தார்.

வேலி என்ற அவ்விராணி கம்பரை நோக்கி, "இதற்குள் நீ சுவர்வைத்து விட்டையா? எங்கே காட்டு, பார்ப்போம்?" என்று, கம்பருடன் அவ்விடம் சென்று பார்த்தாள். பார்க்கவே, சுவர் விழுந்திருக்கக் கண்டு, "என்ன அப்பா! நீ வீணே என்னை இங்கு இழுத்துவந்தாய்; கூலிவாங்கும் நீ வேலையை இப்படிச் செய்யலாமா?" என்று கடு கடுத்துச் சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

கேட்ட கம்பர் மிக்க வியசன மடைந்து, "இதுவும் ஒருகாலந்தான்!" என்று தன் விதியை வெறுத்துக்கொண்டு, மறுபடியும் சுவர் வைத்தார்; அது முடிந்ததும், அதை அசைத்துப் பார்த்து, உறுதியா யிருக்கிறதென்று கண்டு, வேலியிடம் போக ஓர் அடி எடுத்துவைத்தார். அப்போது அந்தச் சுவர் விழுவதற்குப் போல ஆடுகிறதைக் கண்டு, "இது ஏதோ தெய்வக்கோளாறு" என்று கம்பர் அறிந்து,

"மற்கொண்ட திண்புயத்தான் மாநகர் விட்டிங்குவந்தேன்
சொற்சொண்ட பாவின் சுவையறிவா ரிங்கில்லையே
விற்கொண்ட பிறை நுதலாள் வேலிதருங்கூலி
நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே"

என்று ஒரு பாட்டுப் பாடினர்.

யார் அங்குவந்து சுவர் வைத்தாலும், அதை இடித்துத் தள்ளிக்கொண்டிருப்பது ஒரு கொடிய பிரமராக்ஷஸமாகையால், அது இக்கவியினது பாடலைக் கேட்டதும் நடுநடுங்கிப்போய், ஓடிவிட்டது. கம்பர் பார்த்து, "இனி மோசமில்லை" என்று வேலியிடம் சென்று, "சுவர் வைத்தாயிற்று" என்றார்.

அவள் மறுபடியும் வந்து பார்க்கச் சுவர் உறுதியாய் நிற்கக்கண்டு, கம்பரைப் பெரிய மந்திரவாதி என்று நினைத்து, வெகு உபசாரம் செய்து, தன்னிடத்தில் சிலநாள் வைத்திருந்து அனுப்பினள்.

தமது கல்வியின் மேம்பாட்டால் எழுத்து வாசனையேயற்ற அநாகரிகதேசத்தும் மகா கவியான கம்பர் சிறப்புற்றார். அவருக்கு உற்ற துணையாயிருந்தது அவரது கல்வியே யல்லவா?

27. "தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிதென் றகமகிழ்க"

ஒரு காட்டிலுள்ள முயல்களெல்லாம் ஒன்றுய்க் கூடி, "நாம் ஸதா ஸர்வகாலமும் நாய்க்கு அஞ்சிப் படுகிற மனவேதனை இவ்வள வவ்வள வென்பதில்லையே; நாம் ஏன் இப்படியாக அவஸ்தைப் படவேண்டும்; எல்லாருமாகச் சேர்ந்து இந்த ஏரியில் விழுந்து பிராணனை விட்டுவிடுவோம்" என்று தீர்மானித்தன. அத் தீர்மானத்தின்படி அவை எல்லாம் ஒன்று கூடி, ஏரி கரையண்டைபோகையில், நீரோரத்தில் உட்கார்ந்திருந்த தவளைக் கூட்டங்கள் இவற்றைக் கண்டு நடுங்கி, 'சட சட' வென்று நீரில் பாய்ந்து மறைந்தன.



பார்த்த முயல்கள், 'ஆ! ஆ! நம்மையும் கண்டு அஞ்சும் ஜந்துக்களுமல்லவோ உலகில் இருக்கின்றன! ஒளிந்து ஒளிந்து கொண்டாயினும் அவைகள் ஜீவனை ரக்ஷித்திருக்க, நாம் மாத்திரம் ஏன் உயிர் விடவேண்டும்? புத்திமான்கள் தம்மின் இளைத்

62 222807

...தவரைக் கண்டு தான் மனம் தேற வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டு, தத்தம் வழி போய்ச் சேர்ந்தன.

031,5x N15

28. "ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட மீச்செலவு காணின் நனிதாழ்ப''

ஒருகாட்டில் வசித்துவந்த ஒரு சிங்கம் சிறிய ஒரு நரியினிடம் மிக்க தயையா யிருக்க, நரியும் சிங்கத்தினிடம் மிக்க வணக்கமா யிருந்ததோடு, தினமும் பல பல மிருகங்களை வஞ்சித்துச் சிங்கத்தினிடம் அழைத்துவந்து அடிக்கும் படியும் செய்து வந்தது. அந்த விசுவாசத்தால் சிங்கம் தான் அடித்த இரையில் நரிக்குள்ள மாமிச பாகங்கொடுத்து, அதை ஆதரித்து வந்த[illegible]

இப்படியாகப் பலநாள் நடந்த பிறகு அந்த அற்பநரி மிக்க அகங்காரம் கொண்டு ஒருநாள் சிங்கத்தினிடம் போய், "நான் இல்லாதுபோனால் நீர் இரை யகப்படாது பட்டினி கிடக்கவேண்டியது தானே; அப்படி இருக்க நீர் ஏன் கிடைத்த ஆகாரம் அனைத்தையும் நீரே உண்டு விட்டு, எனக்குக் கொஞ்சமாகக் கொடுக்கிறீர்? இது சிறிதேனும் நியாயமாகுமா? ஒருவேளை நீர், 'நாம் தானே பிராணிகளை அடிக்கிறோம்' என்று கருவமுற்றிருக்கக்கூடும்; இனி அந்த வேலை உமக்கு வேண்டாம்; நாளை முதல் நானேபோய் இரையடித்துக்கொண்டு வருகிறேன், பாரும்'' என்றது.

சிங்கம் சிரித்து, "ஆகட்டும் சுவாமீ! எனக்கு அன்னம் போட்டு ரக்ஷிக்கிறேன் என்று நீர் வாக்